

# தென்னாடு

www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2051 வீறியெழல் ஆண்டு சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 14ம் நாள் (29.12.2020) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## ஆறுமுக நாவலரின் குருபூசை



ஐந்தாம் குரவர் எனப் போற்றப் படும் ஆறுமுக நாவலரின் குருபூசை கார்த்திகைத் திங்கள் கொடுநுகம் (மகம்) விண்மீன் அன்று (டிசம்பர் 7ம் திகதி) கொண்டாடப்பட்டது.

# தென்னாட்டின் விதிமாற்றும் விரிசடையான் திருமுறைத் தொகுப்பு

## சிவவழி நின்று விதியை வெல்லலாம் என்று சத்தியம் செய்துள்ளார் திருஞானசம்பந்தர்



சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே

**நீங்கள் விதியை வெல்ல முடியுமா? நிச்சயமாக வெல்லலாம். விரிசடையான் துணைகொண்டு விதியை வெல்லலாம் என்று ஆணையாகச் சொல்லுகிறார் திருஞானசம்பந்தர் சுவாமிகள்.**

உலகின் முதற்கடவுளும், சைவத்தினையும் தமிழினையும் உருவாக்கிய சிவபெருமானின் பாதங்களை, அவனருளாலே வணங்கி திருவருட் துணையுடன் உண்மைகளை உங்களிடம் பகிர்வதில் பேரானந்தம் அடைகிறேன்.

தமிழ் மொழியின் ஒவ்வொரு சொல்லும், அதன் ஓசையும், ஒலியும் இறைவனால் உருவாக்கப்பட்டவை. அதனாலே தான் தமிழ், தெய்வத்தமிழாகப் போற்றப்படுகின்றது. கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் என்ற பரஞ்சோதி முனிவரின் வரிகளும், நிழல்பொலி, கணிச்சிமணி நெற்றி, உமிழ் செங்கண், தழல்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் என்ற கம்பரின் வரிகளும் தெய்வத் தமிழின் தோற்றத்தினை தெளிவாக்கியுள்ளன.

தமிழ் மொழியை முத்தமிழ் என்பதற்கு இயல், இசை, நாடகம் என்பதை விடவும் இன்னும் ஒரு கருத்தியலும் இருந்து வருகிறது. தமிழ் மொழியானது மந்திரம் (மனதைத் திரமடையச் செய்யும் தன்மை), மந்தரம் (மனதைத் தரமடையச் செய்யும் தன்மை) மற்றும் மந்திறம் (மனதைத் திறமையடையச் செய்யும் தன்மை) என்ற மூன்று வகை ஆற்றலை உடையது. இது தெய்வத்தமிழாகிய எங்கள் பைந்தமிழுக்கே உரிய சிறப்பம்சமாகும்.

### வினையும் விதியும் - வினையின் விளைவே விதியாகும்

தமிழ் இலக்கணமாயினும் சரி, சைவக் கோட்பாடாயினும் சரி, வினை என்றால் ஒரு செயலையே குறிக்கும். நாங்கள் வாழ்க்கையில் விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, நினைத்தோ நினைக்காமலோ பலவிதமான செய்கைகளை அதாவது வினைகளைச் செய்கிறோம்.அவை நல்லதாக இருந்தால் நல்வினை என்றும் தீயவையாயின் தீவினை என்றும் இரண்டு பிரிவுகளாகின்றன.

சுதந்திரமான வாழ்க்கையை உங்களுக்கு தருவதற்காக கடவுளின் படைப்பில் மனிதரை சுயாதீனமாகப் படைத்தது ஆறாம் அறிவு எனும் பிரித்தறியும் திறனையும் சேர்த்து பூவுலகுக்கு அனுப்புகிறார். அந்த ஆறாம் அறிவைப் பயன்படுத்தி எது சரி எது பிழையென்று பிரித்தறிய முடியாமல் எமக்காக, எம்மைச் சார்ந்தவர்களுக்காக மனம், வாக்கு, காயம் இவை மூன்றினாலும் ஐம்பொறிகளாலும் நாங்கள் பலவகையான தீய வினைகளைச் செய்து இறுதியில் தீவினைத் தொகுப்பையே மேலோங்கச் செய்கிறோம்.

வினையும் விதியும் என்ற விடயத்தில் இன்னுமொரு கருத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த நூற்றாண்டில் விதியெனப் படும் சட்டவிதிகளால் வினையாகிய குற்றங்களை கட்டுபடுத்தியும், தண்டித்தும் வருகிறது நீதிமன்றம். இதையே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, வினையின் விளைவே விதியாகும் என்றும் வினைகளைக் கட்டுப் படுத்த இறைவழியினை முதன்மை வழியாகவும் கொண்டும் வாழ்ந்தனர் சைவத்தமிழர்கள். அத்துடன் ஊழ்வினையாகிய முற்பிறப்பு வினைகளையும் அழிக்கும் உபாயத்தினையும் கையாண்டு விதியை வென்று வாழ்ந்தனர் பண்டைத் தமிழர்கள். மனிதர்களின் விதிகளில் இயங்கும் நீதிமன்றத்தால் தண்டனைக் காலத்தினைக் குறைத்து மன்னிப்புக் கொடுக்கும் பொழுது, உயிர்களிடத்தில் எல்லையற்ற அன்பைக் கொண்ட எம்பெருமான் விதியினை நிச்சயம் மாற்றி உங்களுக்கு அருள்பாலிப்பார் என்பதில் ஐயமேது.

நாம் செய்யும் சகல வினைகளுக்கு மூலகாரணம் எங்களின் மனம்.ஆறாம் அறிவினைப் பயன்படுத்தி மனதை நெறிப்படுத்தி நல்லதை செய்தால் விதி நல்லாயிருக்கும், பிரித்தறியாமல் தீயவற்றினை செய்தால் விதி மாறிப்போகிறது. அந்தவகையில் விதியை வெல்லும் போரில் வெல்லவேண்டியது மனமே என்ற உண்மை வெளிப்படுகிறது.இனி மனதை வெல்வது எப்படி என்று பார்த்தால், முத்தமிழின் திறனாகிய மந்திரம், மந்தரம் மற்றும் மந்திறம் ஆகிய மூன்றாலும் என்ற தெளிவு பிறக்கிறது. அந்தவகையில் தமிழ் வேதங்களாகிய திருமுறைகளை, விரிசடையானை நினைந்து ஒலியெழுப்பி பாடுவதன் மூலம் மனம் திரம், தரம் மற்றும் திறம் அடைகின்றது. இந்நிலையில் உள்ள மனம் நல்லதையே செய்யும். அதனால் நல்வினைப் பயனையே அனுபவிக்கும். அத்துடன் திருமுறைகள் ஊழ் வினையையும் அறுத்து பேரின்பப் பெருவாழ் வினை தரவல்ல மருந்தாகவே இருக்கின்றன.

ஆமை தன் கால்கள், தலை முதலாய ஐந்து உறுப்புக்களையும் ஓட்டுக்குள் ஒடுக்கி

(02ஆம் பக்கம் பார்க்க)

# திருவாசகத்தில் ஒரு வாசகம்



**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை யாம்பாடக் கேட்டேயும்** - திருவெம்பாவை (1-2)

வேத காலத்தில் சூரியனே ஒளியின் மூலமாய் கடவுளென வணங்கினர்.அனைத்திற்கும் காரணமானவன் கதிரவனே என்ற விஞ்ஞானக் கருதும் இருந்தது. அவனே சோதி. ஐதரசனை எரித்தே சூரியன் ஒளியைத் தருகிறான்.இது ஒரு நாளைக்கு முடிவடைந்து அவன் ஒளியிழந்து உலகம் இருளும் காலமும் உண்டு. எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளே இந்தச் சோதியையும் தோற்றுவித்தவர் அதனாலே அவர் “அரும்பெரும் சோதி” எனப்படுகிறார்.இதனையே மணிவாசகர் திருவண்டப் பகுதியில் “அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு” (திருவா 3:20) என்பதன் மூலம் “அமைத்தோன்” என்று அரும்பெரும் சோதியாகிய சிவனை குறிப்பிடுகிறார்.

“சோதியை யாம் பாட” என்ற பதத்தினைப் பார்த்தால் , பாடுவதென்றால் உள்ளம் உவப்பாக அல்லது கவலையாக இருக்கவெண்டும். அது தான் இயற்கை. அவனருளால் அவன் தாள் வணங்குவது போல் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியின் அருள்கொண்டு அவன் புகழைச் சிந்திப்பதால் ஏற்படும் ஆனந்த உணர்வினால் இளமங்கையரின் வாய் முணுமுணுத்தல் பாட்டாக மலர்கிறது. அதேவேளை மணிவாசகர் திருவெம்பாவையைப் பாடும்போது, இறைவனாகிய காதலியை திருப்பெருந்துறையில் பிரிந்த பின்னர் எங்கும் காணமுடியாமல் ஏற்பட்ட கவலையின் வாட்டத்தால் பாடியருளினார்.

அடுத்ததாக “கேட்டேயும்” என்பதனைப் பார்த்தால், ஒருவர் விரும்பினாலோ அல்லாமலோ இசை ஒலி காதினுள் சென்று செவிப்பறை மென்தகடுகளை அதிரவைக்கும். இது தூங்கும் போதும் நடக்கும். அதனாலே செவி மற்றைய பொறிகளிலிருந்தும் வேறுபட்டது. அப்படியிருக்கையில் எங்கள் பாட்டு உன்னை வந்து துயிலெழுப்பி இருக்கவேண்டும் ஆனால் நீ எழவில்லையே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாகும்.

மனிதப்பிறவியின் தன்மை அறிந்து, காலத்தினைப் போக்காமல் சிவனை நினைந்துருகிப் பாடி பேரின்பப் பெருவாழ்வினை அடைவோமாக.

# அடியாருக்கு வாரி வழங்கும் சோழர்கால வாரிவனேசர் மீண்டும் சாவகச்சேரியின் மத்தியில் எழுந்தருளல்



சிவபூமியென்று புகழப்படும் இலங்கையில், இராவணன் காலத்தில் இருந்தே பல சிவன் கோவில்கள் இருந்துள்ளன. முன்னைய காலங்களில் அடியார்கள் தாமாகவே செந்தமிழில் ஆடல்வல்லானை வணங்கி அருளுடன் ஆற்றலும் ஆட்சியும் பெற்று வாழ்ந்தனர். அந்தவகையில் விருபாக்கன் என்பவரினால் வாரிவனத்தில் (சாவகச்சேரியில்) உருவாக்கப்பட்ட தான்தோன்றி இலிங்கக்கோயில், பின்னர் சோழர்களால் பெரிதாக்கப்பட்டு சிறப்பாக இருந்தது. பிற்பகுதியில் போத்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர்களால் கோயில் முற்றாக நாசமாக்கப்பட்டது. அதன்பின் சாவகச்சேரியில் மத்திய போக்குவரத்து நடுவத்திற்கு அண்மித்த இடத்தில் புதிய கோவிலமைத்து சோழர்கால வாரிவன லிங்கத்தினை வைத்து மக்கள் வழிபட்டு வந்தனர். மீண்டும் இறைவன் திருவருளால் வாரிவனத்தின் நடுவிலே நீதிமன்ற வளாகத்தின் முன் புதுப்பொலிவுடன் கருங்கல் கருவூலமாகவும் புதிய இலிங்கமாக வாரியப்பர் எழுந்தருளி செந்தமிழில் வழிபடப்படுகிறார்.

இந்தியாவில் நைமிசாரண்யா வனத்தில் கூடி இருந்த ரிசிகள், முனிவர்கள் சூதக முனிவரிடம் “மாபெரும் முனிவரே! சிவபெருமானைக் குறித்த பல புராணங்களை எங்களுக்கு அருளிச் செய்திருக்கிறீர்கள். கயிலை, காசி, காஞ்சி, சிதம்பரம், திருக்கழுக்குன்றம் போன்ற பல புராணங்களைக் குறித்து விளக்கமான கதைகளை எடுத்துக் கூறியது போல் சிறப்புடைய வேறொரு தலத்தின் பெருமையை இன்று எங்களுக்கு எடுத்துரைக்க வேண்டுகிறோம்“ என்று கேட்டார்கள்.

அதைக் கேட்ட சூதக முனிவர் அவர்களுக்கு வாரிவனப்பகுதியில் (சாவகச்சேரியில்) இருந்த வாரிவனேசர் சிவாலயத்தின் கதையைக் கூறத் தொடங்கினார். சூத முனிவர் கூறிய புராணமாகிய தக்ஷிண (தென்) கைலாச புராணத்தில் பதின்னான்காவது படலத்தில் குறிப்பிட்டுள்ள புராணத்தில் வாரிவனம் பற்றிய வரலாற்றினை கீழே பார்ப்போம்.

முற்காலத்தில் சோழவள நாட்டில் சிறப்பான இடமாகிய திருவாஞ்சியப் பகுதியில் சிவபத்தனாகிய வைசிய குலத்தினைச் சேர்ந்த (வணிக குலம்: குலவியல்புகள்-வாணிபம் செய்தல், பயிரிடுதல், வள்ளல் தன்மை, ஏமாற்றாமை, கிடைத்த பொருளைக் கொண்டு மன நிறைவு அடைதல்) விருபாக்கன் வாழ்ந்து வந்தான். அவன் தன்னை நாடிவரும் முனிவர்கள், சிவனடியார்கள், துறவிகள் மற்றும் அந்தணர்களுக்கு நெல், உணவு, பொன், பொருள், ஆடை போன்றவற்றை வாரி வழங்குவான். அடியார்தம் பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த விரும்பிய எங்கள் பெருமான், மறையவர் வேடம்தாங்கி விருபாக்கனிடம் வந்து தனக்கு வீடு வாசல் இல்லையென்றும் உண்ண உணவில்லையென்றும் கூறி இரந்து நிற்க, விருபாக்கன் தன் வீட்டையும் விளை நிலங்களையும் மறையவருக்கு எழுதிக்கொடுத்தார். பின்னர் இவற்றினை வாங்கிய மறையவர் மறைந்ததைக் கண்ட விருபாக்கன் இது ஆண்டவன் திருவிளையாடல் என்று உணர்ந்து மனைவி விசாலாட்சியுடன் திருமறைக்காட்டிற்கு வந்து மறைக்காட்டுநாதரை வணங்கிப் பின்னர் கப்பலேறி காங்கேசன்துறை வழியாக யாழ்ப்பாணம் வந்தார்.

### சிவலிங்கம் தான்தோன்றியாக வாரிவனத்தில் வெளிப்படல்

கொடிக்கமத்தில் (கொடிகாமம்) வசித்து வந்த விருபாக்கன் வணிக வழி வந்தவன். பொருள் இல்லாவிட்டாலும் அருள்பெற்ற விருபாக்கன் கொடிகாமம் பகுதியில் பசுக்கள் நிறைந்து இருந்ததால் தனது வாழ்வாதாரத்திற்கு பசுக்களை வளர்த்து பால் வணிகம் செய்தான். பாலினை குடத்தில் நிரப்பி தலையில் கொண்டு பல இடங்களுக்குச் சென்று வணிகம் செய்வான்.

(07ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாட்டின் விதிமாற்றும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தன்னைப் பாதுகாப்பது போல் மனிதன் ஐம்புலன்களையும் அடக்கி மனம் பொறி வழிப்போகாது வாழ்ந்தால் அது அவனது ஏழுவகையான பிறப்புகளையும் சிறப்படையைச் செய்யும், என்கிறார் வள்ளுவப்பெருந்தகை.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து – குறள் 126

சைவநெறிக் கோட்பாட்டில் இந்தப்பிறப்பில் மட்டுமல்ல முற்பிறப்பு வினைகளும் தொடர்கின்றன என்ற நம்பிக்கையும் வலுவாக இருக்கிறது.

சிவகங்கையைச் சேர்ந்த கவியோகி சுத்தானந்த பாரதியார் 'தூக்கிய திருவடி துணையென நம்பினேன் துரிய நடராசனே' என்ற தம் பாடலில்

'எத்தனையோ பிறவி எடுத்தெடுத்து இளைத்தேன்
இருவினைப் பயன்களை எய்தி எய்திக் களைத்தேன்,
சித்தம் இனி உன்மேல் வைத்திருக்க நினைத்தேன்
திக்கு வேறில்லை ஐயா! தீனரைக் காக்கும் மெய்யா'

என்று பாடி, மனிதர்கள் பலப்பல பிறவிகள் எடுப்பார்கள் என்பதையும் வினைப்பயனின் பயணத்தினையும் எடுத்துரைத்துள்ளார்.

நாலடியாரில் வரும் வரிகளைப் பார்த்தால்

தாம்செய் வினை அல்லால் தம்மோடு செல்வதுமற்று
யாங்கணுந் தேரின், பிறிதில்லை, – ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே,
கூற்றங் கொண்டோடும் பொழுது

இதிலிருந்தும் நாம் செய்கின்ற வினைகளே மட்டுமே உயிருடன் சேர்ந்து போகின்றதே அல்லாமல் பிறிதொன்றுமில்லை என்பது புலனாகிறது. அதுவே ஊழாகவும், பழவினையாக மறுபிறப்பில் வந்து விதியாக வேலை செய்கிறது எனலாம்.

வினையை அறுக்க முடியுமா ?
அதனால் வரும் விதியை வெல்ல முடியுமா ?
திருஞானசம்பந்தர் வாக்கு

நிச்சயமாக வினைகளை அறுத்து அதனால் ஏற்படுகின்ற வினைப்பயனாகிய விதியினை சிவத்தின் திருவருள் கொண்டு மாற்றலாம் என்று திருஞானசம்பந்தப் பெருமான் ஆணையாகக் கூறுகிறார். மூன்றாம் திருமுறைத் திருவெண்காட்டுப் பதிகத்தின் பதினோராவது பாடலாகிய, பாடலின் பலன்களை விழிக்கும் திருக்கடைக்காப்பில் தமிழ் ஞானசம்பந்தர்,

நல்லவர் புகலியுள் ஞான சம்பந்தன்
செல்வன் எம் சிவனுறை திருவெண்காட்டின் மேற்
சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே

பல வகையான புண்ணியங்கள் செய்த நல்லவர்கள் வசிக்கின்ற திருப்புகலியுள் (சீர்காழி) அவதரித்த ஞானசம்பந்தன், செல்வனாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவெண்காட்டில் பாடிய அருந்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் பத்தியொடு ஓதவல்லவர்களுடைய துன்பங்கள் மறைவதோடு அவற்றிற்குக் காரணமான அருவினையும் (இலகுவில் அகலாத) அறும் என்பது நமது ஆணையாகும் என்று சத்தியம் செய்கிறார்.

திருஞானசம்பந்தரின் முதலாம் திருமுறை திருக்கழுமலப் பதிகத்தில் "வினைகெட மன நினைவது முடிகெனில் நனி தொழுதெழு" என்று வினைகள் அழிந்து, மனத்தில் நினைத்தது நடைபெறவும் வேண்டுமெனில் பிறைசூடும் அண்ணலாரின் திருவடி நன்கு தொழுதெழுக என்று பாடியுள்ளார்.

தோடுடைய செவியன் பதிகத்தின் திருகடைக்காப்பிலிருந்து

ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே

அத்துடன் முதல் திருமுறை கண்ணார்கோயில் பதிகத்தில்

கண்ணார் கோயில் கைதொழுவார்கட்கு இடர்பாவம்
நண்ணா வாகும் நல்வினை ஆய நணுகும்மே

திருக்கண்ணார் கோயிலைக் கைகளால் தொழுது வணங்குவாரைத் துன்பங்களும் பாவங்களும் அணுகாது மாறாக நல்வினைகளும் அவற்றின் பயனான இன்பங்களே வந்துசேரும் என்பதிலிருந்து சிவவழிபாடு விதியை மாற்றும் அல்லது வெல்ல உதவும் என்று அறிந்து கொள்ளமுடிகிறது.

### சுந்தரர் வாக்கு

சுந்தரமூர்த்தி நாயனாரின் ஏழாம் திருமுறையில் திருப்பூவணம் திருப்பதிகத்தில் பாவவினைகளை அறுக்கும் புரிவுடையார் உறையும் திருப்பூவணம் என்று விரிசடையானின் வினையறுக்கும் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

திருவுடையார் திருமால் அயனாலும்
உருவுடையார் உமையாளை ஓர்பாகம்
பரிவுடையார் அடைவார் வினைதீர்க்கும்
புரிவுடையார் உறை பூவணம் ஈதோ

திருமால், பிரமன் ஆகிய காரணக் கடவுளரிலும் மேலான திருவுடையவரும், தமது திருமேனியில் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரும், அன்புடன் தம்மை நாடும் அடியவர்களின் வினைகளைத் தீர்க்க ஆவலாய் இருப்பவருமாகிய சிவபெருமான் திருப்பூவணம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளார்.

சீரின் மிகப் பொலியும் திருப்பூவணம்
ஆர இருப்பிடமாக உறைவான் தனை
ஊரன் உரைத்த சொன் மாலைகள் பத்திவை
பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே

திருப்பூவணம் பதிகத்தில் உள்ள, ஊரன் என்கின்ற நம்பியாரூரன் பாடிய இச்சொல் மாலைகள் பத்தினையும் பாடுபவர் தங்கள் பாவங்களை அறுத்து , வினைகளைக் களைந்து விதியினை வெல்வார்கள் என்று வாக்குறுதி அளிக்கிறார்.

### திருநாவுக்கரசு நாயனார் வாக்கு

நான்காம் திருமுறையில் பாவநாசத் திருப்பதிகத்தில் அப்பர் பெருமானும் பாவங்களை போக்குவான் விரிசடையான் என்பதை விரிவாக விளக்கியுள்ளார்.

முந்தித் தானே முளைத்தானை மூரி வெள்ளேறு ஊர்ந்தானை
அந்திச் செவ்வான் படியானை அரக்கன் ஆற்றல் அழித்தானைச்
சிந்தை வெள்ளப் புனலாட்டிச் செஞ்சொன் மாலை அடி சேர்த்தி
எந்தை பெம்மான் என் எம்மான் என்பார் பாவநாசமே

எல்லாவற்றிற்கும் முன்னே தோன்றிய சிவபெருமான், வலிமை பொருந்திய வெள்ளைநிறக் காளையை ஊர்தியாகக் கொண்டவர். மாலை நேரச் செவ்வானத்தின் நிறத்தினை உடைய அவர், அரக்கனின் ஆற்றலை அழித்தவர். அவரை மனதிலே நிறுத்தி திருநீராட்டி, இனிய சொற்களாலான பாடல்களை பாமாலையாக திருவடியில் சேர்த்து, அவரைத் தந்தையாக, எம்பெருமானாக, கடந்தும் உள்ளேயும் உள்ள கடவுளாக போற்றுபவர்களின் வினைகள் கெட்டு (பாவங்கள் நாசமாகி) நிறைவான வாழ்வு கிடைக்கும். வினைகள் கெடுவதால் விதியில் மற்றம் ஏற்பட்டு வாழ்வு மிளிரும் என்பதே உட்கருத்து.

அதுபோல் மணிவாசகரும் விரிசடையானின் வித்தகத்தினை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க

இந்தவரிகளைப் பார்த்தால், வேகத்தின் விளைவால் பல வினைகள் செய்து சேகரிக்காமல் வேகத்தினை குறைத்து விவேகத்தினை கூட்டி என்னை ஆண்டருளுகின்ற வேந்தன் அடி வெல்க என்றும் அத்துடன் அவனே பிறப்பை அறுக்கும் தலையில் அலங்காரம் கொண்ட தலைவன் என்று விழித்துப்பாடுகிறார். சகல வினைகளையும் அறுத்தபின் சிவமாக்கி பிறப்பினை அறுத்து மீண்டும் பிறப்பில்லா பேரின்பப் பெருவாழ்வு நிலையை தந்து சிவபுரத்தில் இடமளிக்கிறார்.

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

சிந்தை மகிழச் சிவபுராணத்தினை, சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுபவர்களின் முந்தை அதாவது முன்னைய வினைகள் முழுவதும் ஒயும், அறும் என்கிறார் மணிவாசகப்பெருமான்.

மாணிக்கவாசகரின் திருவாசகம் எட்டாம் திருமுறை - அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

பேரின்ப வாழ்வின் வழியை அறியாத தீவினையாளருடன் கூடி அவர் வழியில் சென்ற தனக்கு, தன் பழவினைகள் ஒடும்படி மனமாசு அகற்றி, தன்னைச் சிவமாக்கி ஆட்கொண்டார் என்ற வரிகளில் பழ வினைகள் அதாவது பழைய வினைகளின் தொடர்ச்சி மறுபிறப்பிற்கு வரும் என்ற கருத்தையும், அவற்றினை விரிசடையான், ஓடும்படி செய்து தன்னை ஆட்கொண்டான் என்று சொல்லி திருவாசகத்தினை மலர்ந்தருளும் போது, அந்த திருவாசகத்தினை அழகிய சிற்றம்பலமுடையான் தன் கைப்பட எழுதியுள்ளார். மாசற்ற சோதியாகிய நிமலன், இது பொய்வாக்கியம் என்றால் தன் கையால் எழுதுவாரா என்ற கேள்விக்கான விடையே விதியை வெல்லும் விரிசடையான் என்ற இந்த நூலின் கருப்பொருளாகும்.

திருவாசகம் போற்றித் திருவகவலில்

தாயே ஆகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியனாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி

அதாவது வினைகெடக் கைதரவல்ல கடவுளே போற்றி என்று விழித்துப்பாடுகிறார். அதிலும் வினை களை கெடுத்து கைதரும் கடவுளாகிய சிவபெருமான் என்பதை குறிப்பிடுகிறார்.

திருமூலரின் திருமந்திரமாகிய தமிழ் மந்திரத்தில்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

சிவ சிவ என்றிடத் தீவினைகள் அனைத்தும் அழிந்து, தேவராகி சிவகதியை அதாவது மீண்டும் பிறப்பில்லாத் தன்மையை அடைவார்கள். சிவ சிவ என்ற மந்திரத்திற்கு உள்ள தனித்தன்மையை எளிமையாகக் கூறியுள்ளார். இதனை சொல்லாதோர் தீவினையாளராகவே இருந்து மீண்டும் பிறப்புக்களை எடுத்து வினைப்பயனை அனுப விப்பர்.

இதன்வழி வினைகளை அறுக்க, உயிரில்லாத வினையை எம் உயிருடன் இணைக்கும் பரம்பொருளாம் விரிசடைக்கடவுளின் வழி நின்று வினைகளை அறுத்து, விதியை மாற்றி வெற்றி பெறமுடியும் என்பது திண்ணமாகின்றது.

### திருமுறைகள் ஓதுவதன் பலன்கள்

வினைகளில் இருந்து விடுபடவேண்டும், திருந்த வேண்டும் என்று நாங்கள் நினைத்தாலும் அதனை செய்யமுடிவதில்லை. அதுவும் விதி தான் என்று பலர் கூறும் விதண்டாவாதம் அவர்களின் அறியாமையினதும் சோம்பேறித்தனத்தினதும் வெளிப்பாடே. அறியாமை யில் இருந்து வெளிவர இறை வழிபாடு குறிப்பாக திரு முறைகள் வழிவகுக்கின்றன.

இறைவன், காலத்திற்குக் காலம் நலிவடையும் சைவத் தினை மேம்படுத்தவும், வினைவயப்பட்டு வாழ்வினை வீணாகக் கழிக்கும் மாந்தரை நல்வழிப்படுத்தவும் கரு விலே திருவாக அருளாளர்களை இப்பூவுலகிற்கு அனுப்பி அவர்கள் வழிநின்று எங்களுக்கு அருளை வழங்கியுள்ளார்.

இவ்வுண்மையை "எனது உரை தனது உரையாக" என்று அருளிச் செய்துள்ள சம்பந்தப் பெருமான் திருவாக் கிலிருந்து அறியலாம். திருமுறைகளில் உள்ள ஒவ்வொரு 'சொல்லும்' மந்திர ஆற்றல் உடையது. எனவே, திருமுறைகளை நாம் ஓதும் போது, அதில் உள்ள மந்திர ஆற்றல், நமது உயிரில் கலந்து, நமது அறியாமையைப் போக்கி, வினைகளை அறுத்து விதியை மாற்றுகின்றன. குறிப்பாக தமிழ் மந்திரங்களாக எங்கள் அருளாளர்கள் தந்த திருமுறைகள் அனைத்தும் இறையருள் பொருந்தி யவை. மந்திரத்திறன் கொண்டவை என்பதை மேலே பார்த் தோம்.

திருமுறைகளை ஓதுவதன் மூலம் பழவினைகளை அகற்றியும், பொருள் விளங்கிப் பாடுவதால் இனி வினைகளை சேர்க்காமலும், வாழ்வாங்கு வாழும் மாந்தர்க்கு வினைப்பயனை ஊட்டத் தேவை இல்லாததால் நாளடை வில், விதியை மாற்றும் வல்லமையும் திருமுறைகள் நிச்சயம் வழங்குகின்றன. நாளாந்த வாழ்க்கையில் உங்கள் முயற்சிகளை இடையறாது செய்தவண்ணம் திருமுறை களை பாடி வினைத்தடைகளை அகற்ற வெற்றி நிச்சயம் வரும்.

### திருமுறைகளை பண்ணுடன் தான் பாட வேண்டுமா ?

கட்டாயமாக பண்ணுடன் பாடினால் தான் அதன் அருள் கிடைக்கும் என்றில்லை. திருமுறைகளை தொடர்ந்து காலையும் மாலையும் கருத்துடன் நாளும் , உடலையும் மனதையும் சுத்தப்படுத்தி இயன்றளவு ஒலி அதாவது தமிழ் மந்திர ஒலி வெளிப்படுமாறு பாடுவது நன்மை பயக்கும். அத்துடன் பாடும் போது சொல்லும் பொருளும் வெளிப்பட உரைக்கின் மிகச்சிறப்பாகும். பண் தெரிந்தவர்கள் பண்ணுடனும் பாடலாம். எதுவாக இருந்தாலும் தமிழ் ஒலிச்சத்தம் வெளிவரவேண்டும்.

இசை முக்கியமில்லை என்பதை, சம்பந்தப்பெரு மானின் வரிகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

கோழை மிடறாக கவி கோளும் இலவாக இசை கூடும் வகையால்
ஏழை அடியார் அவர்கள் யாவை சொன்ன சொல்மகிழும் ஈசன்

வழிபாட்டாலும், தேவாரத் திருப்பதிகங்களை ஓது வதாலும் பழவினை மற்றும் வருவினை, இப்பிறப்பில் நாம் அனுபவிக்க இருக்கும் வினை ஆகிய இவை யெல்லாம் தீரும் என்பது ஆளுடைய பிள்ளையாரின் அறிவுரை.

வல்லதோர் இச்சையினால் வழிபாடு
இவைபத்தும் வாய்க்கச் சொல்லுதல்
கேட்டல் வல்லார், துன்பம் துடைப்பாரே

சிவவழிபாடும், திருமுறை ஒதலும் நிச்சயமாக வினை யினால் வரும் துன்பத்தினை நீக்கும். அத்துடன் வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் வல்லார் என்பது எழுதப்படிக்க தெரிந்தவர்கள் திருமுறைகளை படித்து பொருளுணர்ந்து சொல்லுதல் சிறப்பு அத்துடன் எழுதவாசிக்க முடியாத வர்கள் திருமுறைகளை மற்றவர் சொல்ல கேட்பதே போதுமானது என்பதாகும். மேலாக ஈசன் எல்லோருக்கும் சமமானவன் என்பதும் வெளிப்படையாகிறது. படிக்கத் தெரியாதவர்களின் நிலைமைக்கு விதிப்பயன் காரண மல்ல அவர்களின் முயற்றியின்மையே காரணம். அவர்க ளும் திருமுறைகள் உரக்க கேட்பதன் மூலம் வினைகளை அறுக்கமுடியும்

மேற்குறிப்பிட்ட முறைகளில் திமுறைகளை, காலை மாலை இரண்டு வேளையும் பாடத்தொடங்க நிச்சயம் மாற்றம் தெரியும். தொடர்ந்து பாட துள்ளியோடும் தொடர்ந்து வினைகளே. ஊழ் வினைகள் ஓட நல்வினை பொங்கும் இதன்வழி நிச்சயம் விதிமாறும், எல்லாம் நன்றாகவே நடக்கும். விதிமாற விரிசடையான் வழி நில்லுங்கள். ஆராத இன்பம் அருளுமலையாகிய ஆடல் வல்லானின் அடி போற்றுங்கள். பேராது நிற்கின்ற பெரும் கருணைப் பேர் ஆறாகிய பரம்பொருளின் பாதம் பணி யுங்கள். வாழ்வில் வெற்றி நிச்சயம் இது சத்தியம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

**திருவம்பலம் தென்னவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்**
**கொக்குவில் , யாழ்ப்பாணம்.**
**+94 21 221 2739 | thennavan@thennadu.org**
**www.thennadu.org**



# தென்னாடு

www.thennadu.org

சிவத்திரு.செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாட்டுத் திண்ணை,
சைவ மாணவர் சபை (பதிவு – HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



# ஈழமண் காணட்டும் மார்கழிப் பெருவிழா!

கொடுந் துயரம் தரும், கொரோனா நுண்மியின் பரவுகையால்,நாமெல்லாம் நலிவுற்று,அகத்தில் அச்சமுற்று அல்லல் படுகின்றோம்! சமூக முற்றடக்கத்தால், வாழ்வாதாரம் இழந்தும், வறுமைப்பட்டும் எம் மண்ணில் பல அன்றாடக் கூலிகள் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் நாளும் காண்கின்றோம். வாழ்வியல் சடங்குகளில் எல்லாம் உறவுகள் கூட முடியாத துயரமும், ஆலயங்களில் கூட மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களை உள்வாங்குவதுமாக, கூறமுடியாத அளவுக்கு இந்த வாழ்க்கை மீது வெறுப்பை உமிழ்ந்து போகிறது.

சைவத் தமிழர்களால் இந்த நிலையைத் திடீரென ஏற்றுக் கொள்ள முடியாது தான்! நாளெல்லாம் விழாக்களையும், மாதங்கள் தோறும் ஊர்க்கூடும் நிகழ்வுகளையும் நடாத்தி, உலக கலாசாரத்தின் உயர் புள்ளியில் வரலாறு பொதித்த, செறிந்த இலக்கியச் சான்றுகளும், இணையில்லாப் பெருங்காப்பிய ஆதாரங்களும் கொண்டவர்கள் அல்லவா நாம்? எங்கள் வாழ்வியல் முறைகளும், வழிபாட்டுக் கோலங்களும், முதலில் நாம் செழிப்புற இந்த மண்ணில் வாழ்வதற்கான வழிகளையே எமக்குச் சொல்லித் தருகின்றன. சுத்தமும் சுகாதாரமும் நல் ஒழுக்கமும், எங்கள் வாழ்வியலில் சடங்குகளிலும், விழாக்களிலும் குறியீடுகளாகக் காட்டப்பட்டன, சட்டங்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன... அவற்றை மறந்ததால் தான் இன்று முழு உலகமும் இடர்படுகின்றது. இந்த நிலையில், வருட ஆரம்பத்திலேயே தொடங்கிய இப்பெருந்துயர் நீண்டு நீண்டு இந்த மார்கழி வரை தன்னை நிலைப்படுத்தி எம்மைத்துயர்படுத்துகின்றது!

மார்கழி பிறந்து விட்டது!

சைவத் தமிழர்கள் சிலர் பிற சமயத்தவர்கள் பண்டிகைகளை, பொதுவென ஏற்றுத் தம் வீடுகளை அலங்கரிக்கின்றனர், சிலரோ ஆண்டிறுதி விடுமுறை கிடைக்கும் என்று புலம்பெயர் தேசங்களில் புழகாங்கிதம் அடைகின்றனர். இன்னும் சிலரோ வருட நிறைவு சிறப்புச் சம்பளச் சலுகைக்காக காத்திருக்கின்றனர். ஆனால் மார்கழியின் மாண்பையும் மகத்துவத்தையும் யாரும் பேசுவதாக இல்லை!

இந்தப் பிரபஞ்சத்தில் புவி சார்ந்து, சூரியனின் உத்தராயணம் என்று வடமொழி கூறும், வடதிசை நகர்வு தொடங்கவும், தட்சணாயனம் என்று வடமொழி கூறும்,தென்திசை நகர்வு நிறைவுறவும் இடைப்பட்ட, சந்திக் காலமாக இன்னும் குறிப்பாக, இறை வாழிபாட்டுக்கு உகந்த காலமாக இந்த மார்கழி பிறந்துள்ளது!

தில்லையில் கூத்தனாகிய நடராசர், ஆதிரைநாள் திருக்காட்சி காட்டும், வைகுண்டத்திலே சுவர்க்க வாசல் திறந்து திருமால் தன் திருக்கோலம் காட்டும் புண்ணிய மாதம் இந்த மார்கழி மாதம்! எப்படி ஒரு நாளில் இருள் நீங்கி ஒளி பிறக்கும், இருளும் ஒளியும் கலந்த, அவையிரண்டும் சந்திக்கும் சந்திக்காலத்தில், இறைவனுக்கு பூசை நடைபெறுகிறதோ, அங்கனம், இந்த மார்கழி மாதம் முழுதும், வழிபாடுகளும், நல்லதைச் செய்யும், அன்னதானங்களும், அறிவு பெருகும் பக்தி உரைகளும், இறைவன் மகிழும் இன்தமிழ் வேள்விகளும், இசை விழாக்களும் நடாத்தப்பட வேண்டும்!

தேவர்களும், அசுரர்களும், பாற்கடலைக் கடைந்தது இந்த மார்கழியில் என்பதை மனதுள் நிறுத்துவோம்! ஆலாலகண்டனாகிய ஆடல்வல்லான், பொங்கி வந்த அமுதத்தை அடியவர்க்கு வழங்கி, சீறிவந்த, கொடு விடத்தை தனதாக்கிகொண்ட இந்த மார்கழி மாதத்தில் நாம் செய்யும் நற் செயல்களில் நாம் அறியாமல் உருவாகும் தீவினைகளை இறைவன் தனதாக்கிக் கொள்வான் என்ற நம்பிக்கை நம்மில் உண்டாகட்டும்!

அன்பான சைவத் தமிழ் உறவுகளே, நம்மிடையேயும் தமிழாகிய ஒரு பாற்கடல் தேங்கிக் கிடக்கிறது! அதன் பெரும் பிரிவுகளான, இயல், இசை நாடகம் அலைகளென எழுந்து சிறக்கிறது! அந்தத் தமிழ் கடலை ஊர்கூடிக் கடைவோம்! தமிழகத்தில் பல்வேறு மாநிலங்களிலும் நடைபெறும், மார்கழிப் பெருவிழாவை ஈழமண்ணும் காணட்டும்!

முத்தமிழால், எங்கள் முற்றமெல்லாம் சிறக்க, இளைய தலைமுறை இந்த இறைமாதத்தின் பெருஞ்சிறப்பை உணர, எம் இருப்புக்களைக் காக்க, தம் பொறுப்புக்களையுணர்ந்து, எம் சைவத் தமிழ் உலகின் பெரியவர்கள் மார்கழிப் பெருவிழாக் காண வழி செய்வார்களாயின் வாமும் தலைமுறையும் வரும் தலைமுறையும் வாழ்த்தும்!




பள்ளி நிறுவுனர்
சிவத்திரு
ச.ஏழூர்.இராசரத்தினம்

சைவப்புலவர்.
சு.செல்லத்துரை
அதிபர் 1974-1998

திங்கள் ஒரு பள்ளி

## வலிகாமம் தென்மேற்கின் சித்தாந்த விழுது

# இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

இப்பாடசாலை 1922ஆம் ஆண்டு வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களால், அவ்வேளையில் இளவாலை வடக்கில் வாழ்ந்த நன்மனம் படைத்த பல பெரியோரின் துணை கொண்டு நிறுவப்பட்டது. அந்நியர் ஆட்சிக் காலமாகிய அந்நாளிற் பணவசதி படைத்தவர்கள் மட்டுமே கல்வி பெறமுடிந்தது, கிறீஸ்தவ மதத்தைத் தழுவவிரும்பியோர்க்கும் கல்வி வசதி கிடைத்தது. ஏழை மக்கள் குறிப்பாகச் சைவசமய ஏழைப் பிள்ளைகள் கல்வி வாய்ப்பின்றி அலைவதை இருபத்து நாலுவயது இளைஞரான ஏழூரரின் உள்ளம் பொறுக்கவில்லை. “எல்லார்க்கும் கல்வி“ என்ற கல்வித்தத்துவம், இந்நாட்டில் இலவசக்கல்வி நடைமுறைக்கு வந்து பலதலைமுறைகள் கழிந்தபின் கூட இன்றும் அழகியதத்துவமாகச், சொல்வடிவில் இருக்கின்றதே தவிரச் செயல்வடிவு பெறவில்லை. இன்றும் பணவசதிபடைத்த பிள்ளைகள்தான் தாம் விரும்பிய பாடசாலையில் அனுமதி பெற முடிகிறது. பிள்ளையின் முன்னாற் பணம் போனால் தான் அனுமதி கிடைக்கும் நிலைதொடர்கிறது என்றால் 75 ஆண்டுகளுக்கு முன்பு நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதைக்கற்பனை செய்து பார்க்கவேண்டும்.

ஏழைப்பிள்ளைகளுக்கு உணவில்லை, உடையில்லை, கல்விவசதியில்லை. இந்த இல்லாமைகளைக் களைய எழுந்த பெருமனம் படைத்த ஏழூரர் உணவுகொடுத்து, உடை கொடுத்துக், கல்வியும் கொடுத்த நிறுவனம் தான் எமது பாடசாலை. தான் பெருஞ் செல்வராயில்லாத போதும் இல்லையென்னாத பொன்மனம் படைத்தவராக அவர் இருந்தார். வசதி படைத்தவர்களை நாடிச் சென்று அவர்களையும் வள்ளல்களாக்கி அறப் பணியாகப் பாடசாலையை வளர்த்தார். தனது சொந்தக்காணி 28 பரப்பையும் பாடசாலைக்கு நல்கியதோடு மட்டுமன்றிப் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்டபோது அதற்கு ஓடு போடுவதற்கு நிதி தேவைப்பட்டபோது தன்மனையாளின் மாங்கல்யத்தையே நல்கினாரென்றால் அவரது வள்ளன்மைக்கு நிகரேது. தானும் ஆசிரியராயிருந்து கற்பித்ததோடு முகாமையாளராயும் இருந்தார்.

சைவசமய மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு ஊற்றுக்கண்ணாயிருந்த சைவவித்தியா விருத்திச் சங்கம், இப்பாடசாலையை உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்து கைகொடுத்தது. ஏழூர் இராசரத்தினம் தொடங்கிய இப்பாடசாலைக்கு இந்து போட் இராசரத்தினம் உதவிக்கரம் நீட்டினார். இரட்டையர்கள் என அந்நாளிற் போற்றப்பட்ட இராசரத்தினங்களின் அரவணைப்பில் மெய்கண்டான் வீறுநடை போட்டு வளர்ந்தது.

இப்பாடசாலை வரலாற்றில் துன்னாலை ச. சுப்பையா அவர்கள் அதிபராயிருந்தகாலம் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. எம்போன்ற பலநூறுபேரை இந்த மாநிலம் பயனுறவாழ உருவாக்கிய பெருமை அவருக்குண்டு.

தொடர்ந்து அதிபர்களாக வந்தவர்களில் வித்துவான் வ. செல்லையா அவர்களும் திரு. மு. சிவராசரத்தினம் ஆ.யு. அவர்களும் ஒளிமயமான எழுச்சிக்கு வழிவகுத்து, வளர்ச்சித்திட்டங்களை உருவாக்கிப் பாடசாலையை உறுதியுடன் முன்னெடுத்து

மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். 1974ல் அதிபரான சைவப்புலவர் சு.செல்லத்துரை 1998 வரை பல அபிவிருத்திகளை மேற்கொண்டார். முன்னோர் நல்கிய உழைப்பாகிய உரத்தின் துணைக்கொண்டு பாடசாலை வேகமாக வளர்ந்தது. பௌதிக வள அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, கலை, விளையாட்டு முதலாம் இணைப்பாட அபிவிருத்தி ஆகிய பன்முக வளர்ச்சி ஏற்பட்டது. பல்வேறு போட்டிகளிலும் பங்கு பற்றிப்பாடசாலை வெற்றிகளை ஈட்டி நாற்றிசையும் பெருமை பெற்றது.

எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளிலும் பாடசாலைபெற்றவளர்ச்சி குறிப்பிடக்கூடிய பெருமைக்குரியது. இதற்கு உதவியோரில் அந்நாள் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம், கிராம சேவையாளர் க.க.வேலாயுதபிள்ளை பாடசாலை அபிவிருத்திச்சங்கச்செயலாளர்களாயிருந்த திரு. மா. மார்க்கண்டு, திரு.சா. செல்லையா, திரு. சி. அப்புத்துரை முதலானவர்களின் வழிகாட்டலும் பங்களிப்பும் போற்றுதற்குரியன.

1980 மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது மற்றும் உயர்தர கலை வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் மாடிக்கட்டிடம், விளையாட்டரங்கு, திறந்த வெளி அரங்கு, சிறுவர் பூங்கா அமைக்கப் பட்டன.

“எல்லார்க்கும் கல்வி“எனும் இலட்சியமும் “வாழக்கல்மின்“ எனும் மகுடவாசகமும், இல்லாதோர்க்கு உணவும், உடையும் கொடுத்துக் கல்வி புகட்ட வேண்டும் எனும் கொள்கையும், சாதிசமய வர்க்கபேதமின்றிக் கல்வி என எவர் வந்தாலும் அவரை ஆதரித்துக் கல்வி வழங்கும் பண்பும் இன்று வரை தொடர்ந்து உயிரான கொள்கையாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

பாடசாலை, சமூகத்தின் பண்பாட்டுமையம் என்பதற்கிணங்கச் சமூகப் பயன்பாடுகளுக்கு சமூக மேம்பாட்டுக்கு இப்பாடசாலை அளப்பரிய சேவை செய்து வருகிறது. போர் நெருக்கீடுகளால் மக்கள் இடம் பெயர்ந்த காலகட்டங்களில், இது நலனோம்பு நிலையமாகவும், வைத்திய நிலையமாகவும், கூட்டுறவுச் சங்கக்கடைகள் இயங்குவதற்குரிய இடமாகவும், அரசு அலுவலகங்கள் இயங்குவதற்குரிய இடமாகவும், எண்ணில்லாத இடம் பெயர்ந்த மாணவர் கல்வி பயில்வதற்குரிய இடமாகவும் விளங்கி வந்துள்ளது.

ஒருபாடசாலையின் உயர்வுக்கு உண்மையான உழைப்பாளிகள் ஆசிரியர்களே. ஆசிரியர்களின் தியாகசேவையும், பற்றுறுதியும் எனது பாடசாலை எனும் அயராத ஆர்வமும், சுயதிருப்திகாணும் செயல் திறனுமே மெய்கண்டானை மெய்யாக உயர்த்தின. எழுபது எண்பதுகளிற் கடமையாற்றிய அத்தனை ஆசிரியர்களுக்கும் இந்தப்பெருமையிற் பங்குண்டு. நீண்டகாலம் தியாக சிந்தையுடன் பணிபுரிந்தோர் முதல்நிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்களே!

தொடர்ந்து இங்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் முன்னோர்வழிநின்று போற்றுதற்குரிய சேவை செய்துள்ளனர். பாடசாலை இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பிலும் மானிப்பாயிலும் இயங்கிய வேளையில் எமது ஆசிரியர்கள் தமது இழப்புகளையும் பொருட்படுத்தாமல், பாடசாலையைத் தளரவிடாமற் செய்த சேவை வரலாற்றுப்பெருமைமிக்கது. வலிகாம இடம் பெயர்வின் பின் பல ஆசிரியர்கள் வன்னிக்கும், பிறமாவட்டங்களுக்கும் இடம் பெயர்ந்ததால் உறுதியான ஆசிரிய அணி நிலைகுலைந்தது.

(04ஆம் பக்கம் பார்க்க)

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின் உங்கள் பாடசாலை அல்லது கல்லூரி குறித்து 350 சொற்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

*அனுப்ப வேண்டிய முகவரி*

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : aathan@thennadu.org



சிவத்திரு
குமரேசன் இராஜசிம்மன்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்
# திருமூலர் தவமிருந்த திருஆவடுதுறை



தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 36வது திருக்கோவில் - திருஆவடுதுறை

**அமைவிடம்:** (மயிலாடுதுறை - தமிழ்நாடு)

மயிலாடுதுறையில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும், மயிலாடுதுறை - கும்பகோணம் புகையிரத வழியில் உள்ள நரசிங்கன்பேட்டை புகையிரத நிலையத்தில் இருந்து கிழக்கே 3 கி.மீ. தொலைவிலும் இத்தலம் இருக்கிறது. மயிலாடுதுறை - கும்பகோணம் சாலை வழியில் உள்ள திருவாலங்காடு என்ற பேருந்து நிறுத்தத்தில் இறங்கி 1 கி.மீ. ஒரு கிளைப் பாதையில் நடந்து சென்றால் இத்தலத்தை அடையலாம்.

**சிறப்புக்கள் :**

திருஞானசம்பந்தர் யாகத்திற்கு செய்வதற்கு பொருள் வேண்டி "இடரினுந் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்" என்று தொடங்கும் பதிகம் இங்கு தான் பாடினார். சிவபெருமான் இத்தலத்தில் போகர் முதலிய ஒன்பது கோடி சித்தர்களுக்கு எண்வகைச் சித்துகளை திருவாய் மலர்ந்ததாக நம்பிக்கை. அத்துடன் திருஞானசம்பந்தர் இப்பீடத்தின் அருகில் தமிழ்மணம் கமழ்வதை அறிந்து பீடத்தின் கற்களை பெயர்க்க அதன் அடியில் இருந்து திருமூலர் பாடிய திருமந்திரம் வெளிப்பட்டது. இத்தலம் திருமணத் தடை நீக்கும் தலமாகும். இல்லறம் நிலைத்திருக்க, இணையர்கள் ஒற்றுமையுடன் இருக்க, நல்ல பிள்ளை வரமாகக் கிடைக்கவும் இங்கு வேண்டிக்கொள்கிறார்கள்.

சேரமான் பெருமாள் வழிபட்டத் தலம். திருக்கைலாய பரம்பரையில் சிவஞானதேசிகராய் எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளால் நிறுவப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்த திருமடாலயம் திகழும் தலம்.

**இறைவன் திருப்பெயர்:** மாசிலாமணி ஈசுவரர், கோமுத்தீசுவரர்

**இறைவியார் திருப்பெயர் :** ஒப்பிலாமுலை அம்மை

**கோவில் மரம்:** படர்அரசு

**திருக்குளம்:** கோமுத்திக் குளம்

**வழிபட்டோர் :** திருமூலர், முசுகுந்தச் சக்கரவர்த்தி, போகரின் சீடரான திருமாளிகைத் தேவர்,

**பாமாலை:** திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்

**திருக்கோவிலில் பாடப்பட்ட பாடல்கள்**

**திருஞானசம்பந்தர்**

இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

**அப்பர் பெருமான்**

மாயிரு ஞால மெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலுங்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமலவூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே.

**சுந்தரமூர்த்தி நாயனார்**

மறைய வனொரு மாணிவந் தடைய வார மாய்அவன் ஆருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற் கடந்த காரணங் கண்டுகண் டடியேன்
இறைவன் எம்பெரு மானென்றெப் போதும் ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடும் அடைந்தேன் ஆவ டுதுறை ஆதி எம்மானே.

**கோவில் வரலாறு:**

சிவபெருமானும், திருமாலும் - பார்வதியை நடுவராக வைத்து சொக்கட்டான் ஆடி கொண்டிருந்த போது ஆட்டத்தில் காய் உருட்டியதில் சந்தேகம் வர பார்வதியிடம் நடுநிலைத் தீர்ப்பு சொல்லக் கேட்கிறார் சிவபெருமான். பார்வதி திருமாலுக்கு சாதகமான பதிலை கூறியதால் சிவபெருமான் பார்வதியை பசுவாக பூமியில் பிறக்கும் படி சாபம் இடுகிறார். இப்படி பசுவாக பிறந்த பார்வதி பூவுலகில் பல இடங்களில் சிவபெருமானை வழிபட்டாள். இத்தலத்தில் தம்மை வழிபட்டு வர சாபம் நீங்கப்பெறும் என்றார் சிவபெருமான். அதன்படி அம்பாள் பசுவின் வடிவில் இங்கு வந்து, சிவனை வேண்டி தவமிருந்தாள். சிவபெருமான் அவளுக்கு காட்சி தந்து, தன்னுடன் சேர்த்துக் கொண்டு, வீடுபேறு கொடுத்தார். "கோ"வாகிய பசுவிற்கு வீடுபேறு (முத்தி) தந்தவர் என்பதால் கோமுத்தீசுவரர் (கோ+முத்தி+ஈசுவரர் (ஈசன் - ஈவான் ஈசன்) என்று பெயர் பெற்றார்.

**சம்பந்தர் பொன் பெற்றது**

திருஞானசம்பந்தர், இத்தலத்தில் தன் தந்தையார் சிவபாதவிருதயருடன் சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது சீர்காழியில் வேள்வி நடத்த வேண்டுமென சிவபாதவிருதயர் விரும்பினார். எனவே வேள்விக்கு வேண்டிய பொன்னும், பொருளும் வேண்டுமென சம்பந்தரிடம் கேட்க, சம்பந்தர் வேள்விக்குப் பொருள் வேண்டி "இடரினும் தளரினும் எனது உறு நோய் தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்" என்று தொடங்கும் பதிகத்தினைப் பாடினார். சிவபெருமான் பூதகணங்கள் மூலமாக, எடுக்க எடுக்கக் குறையாத ஆயிரம் பொன் கொண்ட ஒரு பொற்கிழியை கொடுத்து அதனை இக்கோயிலில் உள்ள பலிபீடத்தின் அகன்ற பீடத்தில் வைக்கச் செய்தார். பொன் பெற்ற சிவபாதவிருதயர் சீர்காழிக்கு சென்று வேள்வியை நடத்தி முடித்தார். பொற்கிழி வைக்கப்பட்ட இந்த பலிபீடம் வெளிவீதியில் நந்திக்கு அருகில் இருக்கிறது. இதனைச் சுற்றிலும் பொற்கிழி கொண்டு வந்த பூதகணங்கள் இருக்கிறன. இங்கிருந்து சிவனிடம் வேண்டிக்கொண்டால் குடும்பத்தில் நிறைவு பெருகும் என்பது நம்பிக்கை.

ஒன்பதாம் திருமுறையான திருவிசைப் பாவில் நான்கு பதிகங்கள் பாடிய திருமாளிகைத் தேவர் போகரின் சீடர். இவர் இத்தலத்தில் சிவத்தொண்டு செய்து வந்தார். ஒருசமயம் அவர் மீது வீண்பழி சுமத்தப்பட்டதால், நரசிங்கன் என்னும் மன்னன் படை வீரர்களை அனுப்பி அவரை தாக்க முயன்றான். திருமாளிகைத் தேவர், மன்னனின் படைகளை கோயில் மதிலில் உள்ள நந்திகளை உயிர் பெற்றெழச் செய்து விரட்டி அற்புதம் நிகழ்த்திய தலம் திருஆவடுதுறை. இந்த நந்திகள் ஒன்றாக சேர்ந்து இத்தலத்தில் பிரம்மாண்டமான நந்தியாக இருக்கிறது. பல கற்களை இணைத்து செய்யப்பட்ட இந்த நந்தி, பீடம் சேர்க்காமல், 14 அடி, 3 அங்குலத்துடன் உயரமாக இருக்கிறது.

இதற்கு முன்புறம் மற்றொரு சிறிய நந்தியும் இருக்கிறது. பதின்மும்மைப் பிறைநாள் கழுவாய் வழிபாட்டன்று (பிரதோஷ) இவருக்கு மங்கலநீராட்டு நடக்கிறது. இது தவிர அதிகார நந்தியை அடுத்து மற்றொரு நந்தியும் உள்ளது. திருவிடைமருதூர் தலத்திற்கான மீள்வழித் (பரிகார) தலங்களில், இத்தலம் நந்தி தலமாக இருப்பதால் இங்கு நந்தியிடம் வேண்டிக் கொள்வது சிறப்பு. இன்றும் இத்தலத்தின் மதில்களில் நந்திகள் இல்லையென்பதைக் காணலாம்.

சிவபெருமான், முசுகுந்த மன்னனுக்கு மகப்பேறு அருளி, இத்தலத்தைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசராகவும் காட்டிய சிறப்பும் உடையது இத்தலம். மகப்பேறு இல்லாமல் தவித்த முசுகுந்த மன்னனுக்கு இந்திரனிடம் பெற்ற தியாகேசரை தொடர்ந்து வழிபட்டு வந்தான். ஒரு சமயம் சிவபெருமான் அவரது கனவில் தோன்றி, இத்தலத்தில் தன்னை வழிபட குழந்தை பாக்கியம் கிடைக்கப்பெறும் என்றார். அதன்படி இங்கு வந்து சிவனை வணங்கி பிள்ளைப்பேற்றைப் பெற்றார் முசுகுந்தன். எனவே, மகப்பேறு இல்லாதவர்கள் இங்கு வேண்டிக் கொண்டால் பிள்ளைவரம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**திருமூலர்**

சுந்தரநாதர் எனும் சிவயோகியார் கைலாயத்திலிருந்து பூமிக்கு வந்து சிவத்தலங்களை தரிசித்து வந்தார். அவர் இத்தலம் வந்தபோது, மூலன் எனும் இடையன் இறந்து கிடக்க, அவனைச் சுற்றிலும் பசுக்கள் அழுது கொண்டிருந்ததைக் கண்டார். பசுக்களின் மீது பரிவு காட்டிய அவர் தன் உயிரை மூலன் உடலில் கூடுபாய்ந்து எழுந்தார். பின் பசுக்களை வீட்டில் விட்டு வர தனது உடல் கிடைக்கப்பெறாததால் மூலன் உடலுடன் இத்தலத்தில் தவம் செய்யத் துவங்கினார். மூலன் வீட்டிற்கு திரும்பாததால், அவனது மனைவி இங்கு வந்து மூலன் உடலுடன் இருந்த சுந்தரநாதரை தன்னுடன் வரும்படி அழைத்தார். அவர் செல்ல மறுத்தார். மூலன் சிவஞானம் பெற்றதாக உறவினர்கள் கூறவே மனைவி விட்டுச் சென்றுவிட்டாள். அவரே திருமூலர் என்று பெயர் பெற்றார். இவர் ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம், மொத்தம் 3000 பாடல்களை பாடினார். இவையே திருமூலர் திருமந்திரமாக தொகுக்கப்பட்டது. இத்தலத்தின் வெளிப் வீதியில் திருமூலருக்கு திருமுன் (சந்நிதி) இருக்கிறது.

**கோவில் அமைப்பு:**

சுயம்பு மூர்த்தியாக மாசிலாமணி ஈசுவரர் இருக்கின்ற திருக்கோவில். வலப்புறத்தில் தியாகேசர் இருக்கிறார். வீதியில் தெற்கு நோக்கிய திருமுன்னில் (சந்நிதி ) "அணைத்திருந்த நாயகர்' உற்சவராக இருக்கிறார். இவர் அணைத்த கோலத்தில் இருந்தாலும், அம்பாள் மீது கைகள் படாதவாறு சிலை அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சம். இவர் இங்கு வரப்பிரசாதியாக திகழ்கிறார். பிரிந்திருக்கும் தம்பதியர் இவரிடம் வேண்டிக்கொண்டால் மீண்டும் இணைவர் என்பது நம்பிக்கை. ஐந்து நிலைக் கிழக்கு நோக்கிய இராஜகோபுரத்துடன் இக்கோயில் விளங்குகிறது.

இங்கு மூலவர் திருமுன் மேல் உள்ள விமானம் துவைதளம் எனப்படுகிறது. இத்தல விநாயகர் துணைவந்த கணபதி என்ற திருப்பெயருடன் அருள்பாலிக்கிறார். வெளிப்புற வீதியில் இலிங்கத்தின் மீது, பசு பால் சொரியும் சிலை இருக்கிறது. இதனை "கோவுருவ அம்பிகை' என்கின்றனர். அருகில் சனைசரன் இருக்கிறார். ஒன்பது கோள்களுக்கு திருமுன் (சந்நிதி) கிடையாது. ஒரே இடத்தில் மூன்று சூரியன் இருப்பது சிறப்பம்சமாகும். கோபுர வாயிலுக்கு எதிரில் கோமுத்தி திருக்குளம் உள்ளது. கோபுர வாயிலின் இருபுறமும் பசுவான உமைக்குத் துணையாக வந்த விநாயகர், முருகன் திருமுன்கள் (சந்நிதி) உள்ளன. கோபுர வாயிலைக் கடந்தால் நீண்ட நடைபாதை. அதன் முடிவில் உள்ள மண்டபத்தில் பெரிய நந்தியுள்ளது. இந்த நந்திக்குப் பின்னால் உள்ள பலிபீடமே ஞானசம்பந்தருக்குப் பொற்கிழி வைத்தருளிய இடமாகும். பலீபீடத்தினை நான்கு புறமும் பூதகணங்கள் தாங்கி நிற்கின்றன. திருஞானசம்பந்தர் இப்பீடத்தின் அருகில் தமிழ்மணம் கமழ்வதை அறிந்து பீடத்தின் கற்களை பெயர்க்க அதன் அடியில் இருந்து திருமூலர் பாடிய திருமந்திரம் வெளிப்பட்டது. பெரிய நந்திக்கு முன்புறம் மற்றொரு சிறிய நந்தியும் இருக்கிறது.

வசதி நேரும்போது கண்டிப்பாகப் பார்க்கவேண்டிய ஒரு கோவில் இதுவாகும். கோவிலுடன் கூடியதாக திருவாவடுதுறை ஆதீனமும் இருக்கிறது இங்கு சிறப்பாகும்.

கோவில் செல்வதற்கான உதவி மற்றும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயண கட்டுரை ஆசிரியரைத் தொடர்புகொள்ளலாம்.

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்**
**உதவிப் பேராசிரியர்**
SRM **கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
+919003296221 | easanaithedi.in

## வலிகாமம் தென்மேற்கில்

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

937 மாணவர்களுடனும் 32 ஆசிரியர்களுடனும் இடம் பெயர்ந்த பாடசாலை மீளக் குடியமர்ந்து இயங்கும் போது 182 மாணவர்களும் 9 ஆசிரியர்கள் மட்டுமே நிலையாக பணிபுரிகின்றனர்.

எல்லா வசதிகளுடனும், தன்னிறைவுடனும் பாடசாலை பரிமளிப்புடன் இயங்கிய கால கட்டத்தில் 1992.06.11 இல் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த போது பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி உதவிக்கரம் நீட்டியது. அன்றைய அதிபர் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் மேல்மாடி மண்டபம் முழுவதையுமே தந்து, மற்றும் வகுப்பறைகள் பலவும் தந்து உதவிய தாராள மனப்பாங்கை மறக்கமுடியாது. தொடர்ந்து 1992.08.20 இல் அங்கிருந்தும் இடம் பெயர்ந்தபோது மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை அதிபர் அ.மு. அருணாசலம் அவர்கள் எம்மை ஆதரித்து, அரவணைத்துச் சொந்த இடத்தில் இயங்குவது போன்ற சூழ்நிலையை அமைத்துத் தந்த பெருந்தன்மையை மறக்கமுடியாது.

தனியான கொட்டில்கள் அமைப்பதற்கு மெமோரியல் வளாகத்திற் காணிதந்து உதவினார். கொட்டில்கள் அமைப்பதற்குப் பளைக்காட்டிலிருந்து சஞ்சீவிக்கப்பு மரங்கள் பெறப்பட்டன. இதற்கு வழிகாட்டியாயிருந்து உறுதுணைபுரிந்த திரு. நா. கதிர்காமத்தம்பி அவர்களின் உதவி மகத்தானது. ஆசிரியர் திரு.பொ. சத்தியநாதன், க. விக்னேஸ்வரராசா, திரு. மு. சுப்பிரமணியம் முதலானோரின் உறுதியான பங்களிப்பும், பெற்றார்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் ஆசிரியர்களின் பூரண உதவியுங் கொண்டு கொட்டில்கள் அமைக்கப்பட்டன. 1993.09.01 தொடக்கம் காலை நேரப் பாடசாலையாக நடத்தும் வாய்ப்புக்கைகூடியது. மெமோரியலின் சகல கல்விவளங்களையும் பயன்படுத்த வாய்ப்பளித்த அதிபர் அ.மு. அருணாசலம், உதவி அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மானிப்பாய்ப் பிரமுகர்கள் யாவரும் எமது நன்றிக்கும் போற்றுதலுக்கும் உரியவர்களாவர்.

1995.10.30 வலிகாம இடம் பெயர்வின்போது உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் திரு. வரதராசாவும், ஆசிரியர்களும், உதவிக்கரம் நீட்டினர். அங்கு கூட்டுப்பாடசாலைஅமைப்பில் இடம் பெயர்ந்த 7 பாடசாலைகளுக்குத் தலைமைப் பாடசாலையாய் இடம் பெயர்ந்த மாணவர் ஏறக்குறைய 1000 பேரையும் ஆசிரியர்கள் 48 பேரையும் கொண்டு இயங்கியது. மீண்டும் வலிகாமம் திரும்பி 1996.05.06 தொடக்கம் மானிப்பாயில் இயங்கும் வாய்ப்புக் கைகூடியது. படிப்படியாகச் சொந்த இடத்திற்குச் செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு உறுதுணைபுரிந்தோர் பலர். அவருள் திரு. பா. தர்மபாலா அவர்களின் உதவி மிகப் பெரிது.

ஐந்து ஆண்டுகளாகப் பாழடைந்திருந்த சொந்த இடத்திற்கு அடிக்கடி சென்று பற்றை வெட்டி, வேலியிட்டுப் பாதை திருத்தி உதவிய எமது ஆசிரியர்களின் சேவைக்குக் கைம் மாறுயாதுளது. பாடசாலைப் பொருட்கள் அனைத்தையும் பக்குவமாகக் கொண்டு வந்து சேர்ப்பதில் ஆசிரியர்களும் மாணவர்களும், பெற்றாரும், மெமோறியல் கல்லூரியினரும் வழங்கிய ஒத்துழைப்பும் உற்சாகமூட்டலும் போற்றுதலுக்கு உரியன.

1992.06.11 இல் அழுதழுது சொந்த இடத்தைவிட்டு வெளியேறிய நாம் 1997.02.12 இல் மீளவந்த போது பெற்ற ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பாடசாலை வந்ததைத் தொடர்ந்து பல பெற்றோர்களும் ஆசிரியர்களும் மீளக்குடியமரவழி ஏற்படுத்தப்பட்டது. இங்கு மீளக்குடியமரும் வாய்ப்பு இல்லாத மாணவர்களும் கோண்டாவில், உடுவில், மானிப்பாய், சங்கானை முதலான இடங்களிலிருந்து இங்கு வந்து பெருவிருப்புடனும், உற்சாகத்துடனும் கல்விபயில்வது பாடசாலையில் அவர்கள் கொண்ட பற்றுக்கு உரைகல்லாகும்.

பாடசாலைக்கு ஏற்பட்ட அழிவுகள் மிகப் பல. தோரண வாயில் இல்லை . மகரப்பட்சிக் கேற்றுகள் இல்லை. கதவுகள் ஒன்றுமேயில்லை. மோட்டர் நீரிணைப்பில்லை, மின் இணைப்பு இருந்த அடையாளமேயில்லை. சிறுவர் பூங்காவில் ஊஞ்சல்கள் சீ சோர்கள் எதுவுமே யில்லை, கலையரங்கின் கண்டீனின் கூரைத் தகடுகள் ஒன்றும் இல்லை . மலசலகூடங்கள் கூடச் சிதைக்கப்பட்டிருந்தன. கூரைகள் சிதைந்திருந்தன, கனகசபாமண்டபம் பக்கச் சுவரில் ஒருபகுதியில்லை . விளையாட்டுத்திடல் அடர்ந்த காடாயிருந்தது.

இல்லாதநிலையை மாற்றி முன்போல மனோரம்மியமான சூழ்நிலையை விரைவாக உருவாக்க வேண்டும் எனும் ஏகோபித்த எண்ணம் செயல் வடிவானது. முதலாவதாக கனகசபா மண்டபத்தில் நடராசருக்கு ஆலயம் அமைக்கப்பட்டது. நடராசர் வழிபாட்டுடன் அபிவிருத்திகள் ஆரம்பமாகின. நன்மனம் படைத்தவர்களும் பழையமாணவர்களும் நீட்டிய உதவிக்கரத்தின் துணைகொண்டு பாடசாலை பழைய பரிமாளிப்பை மீளப் பெற்றுவிட்டது.

உள்ளக அரங்குடன் கூடிய நூறடி நீளமான மேல்மாடி மண்டப மொன்றும், எல்லோருக்கும் பயன்தர வல்லதொரு நூல்நிலையமும் அமைய வேண்டுமென விரும்பினோம். ஆடலிறை அருளால் எல்லாம் பூரணத்துவம் பெற்றுவிட்டன.

கடந்த 75 ஆண்டு காலத்தில் இப்பாடசாலைக்கு ஈடிலாத் தொண்டாற்றிய எல்லாரையும் எழுத்தில் கொண்டுவருவது முடியாத கருமமாயினும், அனைவரையும் உள்ளத்தால் நினைந்து போற்றி நன்றியுணர்வுடன் வணங்கி நிற்கின்றோம். தற்பொழுது பாடசாலை பழையபடி சிறப்பாக இயங்குகின்றது.



# பரிபாடல் வையைப் பாடல்களில் நீர்ப்பண்பாடு

கலாநிதி
சு.குணேஸ்வரன்

## அறிமுகம்

பழந்தமிழர் வாழ்க்கைக் கோலங்களையும் பண்பாட்டையும் அக்கால வரலாற்றுப் போக்கையும் எடுத்துக்காட்டும் இலக்கிய மூலாதாரங்களில் சங்க இலக்கியங்கள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. அவற்றில் எட்டுத்தொகை நூல்களில் பரிபாடல் தனித்துவமானதாக அமைந்துள்ளது. அகமும் புறமும் விரவிய இவ்விலக்கியத்தில் வையைப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு அக்கால நீர்வழிபாட்டையும் சமூகநிலையை நோக்கமுடியும்.

## பரிபாடல் - சொற்பொருளும் அமைப்பும்

பரிபாடல் என்பது ஒரு யாப்பு வகை என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இது 'பரிந்த பாடல்' எனப்படுகிறது. அதாவது பாடல் கலவையாக ஏற்று வருதல். 'பரிபாடல் என்பது பரிந்து வருவது. அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் பல வடிவும் வருமாறு நிற்குமென்றுணர்க ' (தொல். செய். 118) என்று நச்சினார்க்கினியார் உரைப்பார். இதற்கு தொல்காப்பிய செய்யுளியலில் பின்வருமாறு சூத்திரம் வகுக்கப்பட்டுள்ளது.

' பரிபாட் டெல்லை

நாலீ ரைம்ப துயர்படி யாக

வையைந் தாகு மிழிபடிக் கெல்லை' (தொல்.செய். 474)

சிற்றெல்லையாக 25 அடியும் பேரெல்லையாக 400 அடிவரையும் வரும் என பரிபாட்டில் வரும் வெண்பாவுக்கு தொல்காப்பியம் அளவு கூறுகின்றது. பரிபாடல் இசைப்பாடலாகும். இது இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனலாடல் ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டமைந்துள்ளது.

## பரிபாடல் கிளப்பும் பிரச்சினை

பரிபாடல் தொகுக்கப்பட்ட காலத்தில் மொத்தம் 70 பாடல்கள் இருந்தனவென்று அறியப்படுகிறது. ஆனால் பதிப்பிக்கப்பட்ட நூல்களில் முழுமையாகக் கிடைத்த 22 பாடல்களோடு சிதைவடைந்த வையைக்குரிய ஒரு பாடலும், மேலும் தொல்காப்பிய உரையாசிரியர்களின் மேற்கோட் செய்யுள்களில் காட்டப்பட்ட 13 பாடல்களின் திரட்டுக்களும் உள்ளடங்கலாக தற்போது 24 பாடல்களே பரிபாடல் நூலில் உள்ளடங்கியுள்ளன.

'திருமாற்கு இருநான்கு செவ்வேட்கு முப்பத்

தொரு பாட்டு காடுகிழாட் கொன்று மருவினிய

வையை இருபத்தாறு மாமதுரை நான்கென்ப

செய்ய பரிபாடல் திறம்'

என்ற பழஞ்செய்யுளால் பரிபாடலில் முழுமையாக இருந்த பாடல்கள் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

| பாடல் பொருள் | முன்னர் இருந்தவை | தற்போது கிடைப்பவை |
|---|---|---|
| திருமால் | 08 பாடல்கள் | 06 பாடல்கள் + திரட்டு 1 |
| செவ்வேள் | 31 பாடல்கள் | 08 பாடல்கள் |
| வையை | 26 பாடல்கள் | 08 பாடல்கள் + திரட்டு 2,3,4 |
| மதுரை | 04 பாடல்கள் | திரட்டு 7,8,9,10,11.12,13 |
| காடுகிழான் | 01 பாடல் | -- |
| | 70 பாடல்கள் | 22 முழுமையான பாடல்கள் + திரட்டுகளில் இருந்து 13 பாடல்கள் |

இவற்றில் திரட்டுக்களில் இருந்து பெற்ற 5,6 பாடல்களின் பொருள் எவற்றுக்குரியன என பதிப்பாசிரியர்களால் குறிப்பிடப்படவில்லை.

பரிபாடலுக்கு பரிமேலழகர் உரையொன்று இருந்ததெனவும் அவ்வுரையே பின்னர் புதுக்கியும் விளக்கமும் சேர்த்து நூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன வெனவும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் அவ்வுரை பரிமேலழகர் உரைதானா என்பதில் ஐயமிருப்பதாக கா. சிவத்தம்பியவர்கள் குறிப்பிடுகிறார். எவ்வாறெனினும் பரிபாடல் ஊடாகச் சொல்லப்படும் செய்தி யாது என்பதை அறிவதே முதன்மையான நோக்கமாகும்.

'பரிபாடல் என்பது மிகவும் முக்கியமான அதேவேளையில் ஓர் அசாதாரணமான தொகுதியாகவும் காணப்படுகிறது. முதலாவது, இது ஒரு இசைப்பாடல் இலக்கிய வகை அல்ல. இது முற்றிலும் நிகழ்த்துகை, ஆற்றுகை சார்ந்த ஒரு வடிவம். அதிலே யார் பாட்டு இயற்றினார்கள்? யார் இசையமைத்தார்கள்? என்கின்ற தரவுகள் தரப்பட்டுள்ளன. இசைத்தமிழ் நூல் ஒன்று இங்கு இலக்கியமாகக் கொள்ளப்படுகிறது.' (1)

முருகன், திருமால் கொற்றவை வழிபடு தெய்வங்களாக மக்களால் போற்றப்பட்டவை. ஆனால் வையை பற்றிய பாடல்களும் வழிபடு தெய்வங்களுடன் இவற்றுள் சேர்க்கப்பட்டவற்றுக்குக் காரணம் யாது என்பதும் ஆராயத்தக்கது. அதேபோல் மதுரை பற்றிய பாடல் ஒன்றும் பரிபாடலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு பின்வரும் இரண்டு அம்சங்கள் அடிப்படைக் காரணங்களாக இருந்துள்ளன என்பது நாம் அறியக்கூடியதே.

1. தமிழரின் வழிபாட்டு மரபை எடுத்துக்காட்டுதல்
2. தமிழின் அடையாளமாக மதுரையை நிறுவுதல்

குறிஞ்சிக்குரிய தெய்வம் முருகன் அதுவே பரிபாடலில் திருப்பரங்குன்றப்பாடல்களாக உள்ளன. முல்லைக்குரிய தெய்வம் திருமால், இதனை திருமாலிஞ்சோலைக்குரிய பாடல்கள் காட்டுகின்றன. பாலைக்குரிய தெய்வம் காடுகிழான் எனப்படும் கொற்றவை. இவ்வகையில் நோக்கினால் நெய்தலுக்கு வையையும், மருதத்திற்கு மதுரையும் வணக்கப்பாடல்களாக அமைந்துள்ளன. இவ்வகையில் பரிபாடல் தமிழரின் வழிபாட்டு மரபை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

மறுபுறம் தமிழின் அடையாளமாக பரிபாடலை நோக்கினால், முருகனின் திருப்பரங்குன்றம், விஷ்ணுவின் திருமாலிருஞ்சோலை வையை ஆறு யாவற்றினதும் அமைவிடமே மதுரைதான். முச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்ததும் மதுரைதான். எனவேதான் பாண்டியனின் ஆட்சிச்சிறப்பையும், தமிழின் அடையாளத்தையும் பதிவுசெய்யும் நோக்கமாக பரிபாடல் மதுரையை மையமாகக்கொண்டு தமிழின் அடையாளமாகப் பாடப்பட்டுள்ளது. இதற்கு 'தமிழ் வையைத் தண்ணம் புனல்' என விளித்துப்பாடப்படும் பரிபாடல் வையைப் பாடலடிகளையும் ஆதாரமாகக் கொள்ளமுடியும்.

'பரிபாடல் மதுரை மாநகரையும் மதுரை நகருக்கு வளமும் வனப்பும் காப்பும் தந்த வையை ஆற்றையும் மதுரையைச் சார்ந்த திருப்பரங்குன்றத்துச் செவ்வேளாகிய திருமுருகனையும் மதுரையை அடுத்துள்ள திருமாலிருங் குன்றத்து நெடுவேளாகிய மாயோனையும் கொற்றவைத் தெய்வத்தையும் பாடுவதாக அமைந்துள்ளது. பிறதொகை நூற்களைப் போலன்றித் தமிழ்நாட்டின் பகுதிகளையெல்லாம் கொண்டு எழுந்த செய்யுளாக இல்லாமல் மதுரை நகரையும் மதுரையையொட்டி ஓடுகின்ற வையை ஆற்றையும், திருப்பரங்குன்றத்தையும், திருமாலிருங்குன்றத்தையும் பாடுபொருளாகக் கொண்டு பரிபாடல் எழுந்துள்ளது என்பதால் இந்நூலினை மதுரையைப் பற்றி எழுந்த நூல் எனக் கூறுவர்.' (2)

கா. சிவத்தம்பி அவர்கள் இதற்கு மற்றொரு காரணமும் கூறுவார். தமிழ்நாட்டிலும் தமிழ் இலக்கியத்திலும் சமணர்களின் செல்வாக்கு ஓங்கியபோது வைதீகசமய வழிபாட்டை நிலைநிறுத்தும் பொருட்டு பரிபாடல் ஆக்கப்பட்டது என்பார்.

## வையைப்பாடல்களும் அவற்றின் பொதுவான அமைப்பும்

பரிபாடலில் மொத்தமாக ஒன்பது வையைப்பாடல்கள் உள்ளன. அவற்றில் ஏழு பாடல்கள் முழுமையாகவும் ஒருபாடல் சிதைவடைந்த நிலையிலும் மற்றையது திரட்டுக்களில் இருந்து பெற்றுக்கொண்ட தனிப்பாடல்களுமாகும். இவற்றில் அகத்திணை செய்திகளே பெரிதும் பயின்றுள்ளன. இவை எல்லாவற்றையும் அகப்பாடல்களாகக் கருதியே துறை வகுக்கப்பட்டுள்ளது. ஆனால், பாண்டியனின் ஆட்சிச்சிறப்பு, கொடைச்சிறப்பு, மதுரையின் சிறப்புக்கள் கூறப்படும் பகுதிகளில் புறத்திணைக்குரிய பண்புகள் உள்ளன.

வையையின் வரவும் வளமும், நீராடுவோர் இயல்புகள், நீர்ப்பண்பாடுகள், அகப்பொருள் - புறப்பொருள் தழுவிய செய்திகள், வையையை வாழ்த்துதல் ஆகியன வையைப் பாடல்களின் பொதுவான அமைப்பாக அமைந்துள்ளது. அப்பாடல்களை இயற்றிய புலவர் ஒருவராகவும் அவற்றுக்கு இசை வகுத்தவர் வேறொருவராக இருப்பதும் அறியப்படுகிறது.

வையைப் பாடல்கள் : பாடியோர், இசைவகுத்தோர், பண்

| பாடல் எண் | ஆசிரியர் | இசை வகுத்தோர் | பண் |
|---|---|---|---|
| 6 | ஆசிரியர் நல்லந்துவனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | பண்ணுப் பாலையாழ் |
| 7 | மையோடக்கோவனார் | பித்தாமத்தார் | பண்ணுப் பாலையாழ் |
| 10 | கரும்பிள்ளைப் பூதனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | பண்ணுப் பாலையாழ் |
| 11 | ஆசிரியர் நல்லந்துவனார் | நாகனார் | பண்ணுப் பாலையாழ் |
| 12 | நல்வழுதியார் | நந்நாகனார் | பண்ணுப் பாலையாழ் |
| 16 | நல்லழுசியார் | நல்லச்சுதனார் | பண் நோதிறம் |
| 20 | ஆசிரியர் நல்லந்துவனார் | நல்லச்சுதனார் | பண் காந்தாரம் |
| 22 | ------------- | ------------- | ------------- |
| திரட்டு | ------------- | ------------- | ------------- |

வையை 22 ஆவது பாடலைப் பாடியவர் பெயரும் திரட்டுக்களில் இருந்து பெற்ற 03 பாடல்களைப் பாடியவர்கள் பெயர்களும் அறியப்படவில்லை.

'பரிபாடலில் உள்ள இசைகளின் பெயர்கள் தெரிகின்றனவே ஒழிய தேவாரப்பண்களைப் பாடுவதுபோல் அதனைப்பாட இயலவில்லை. பரிபாடலைப் பாடும் முறை இன்று மறைந்துவிட்டது. இதுவரை அதனை அறிந்து யாரும் பாடவில்லை. அதுபோன்றே பரிபாடல் இலக்கியம் செய்ய யாரும் முயன்றதும் இல்லை. பரிபாடல் இசையை அடிப்படையாகக் கொண்டது என்பதும் அவ்விசை மறைந்து போனது என்பதுமே அதன் காரணமாகும்.' (3)

பிற்காலத்தில் குறிப்பாக களப்பிரர் காலத்தில் அரசு நிலை திரிந்தபடியால் இவை பேணப்படாமல் அழிவடைந்து போயிருக்கலாம் எனவும் மு. அருணாசலம் (தமிழ் இசை இலக்கிய வரலாறு) குறிப்பிடுகிறார். இதனூடாக பரிபாடல் பக்திக்காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியன என்பது உறுதிப்படுகின்றது. இவற்றிலிருந்து பாடலைப் பாடியவர் ஒருவராகவும் அவற்றுக்கு இசை வகுத்தோர் வேறு ஒருவராகவும் இருந்துள்ளமை அக்காலம் இசையில் உன்னதமான நிலையை அடைந்திருந்ததென்பது உணரக்கூடியதாக இருக்கின்றது.

## குறித்துரைக்கக்கூடிய சிறப்புக்கள்

வையைப்பாடல்கள் பழந்தமிழரின் நீராடல் பற்றியது. சிலம்பிலும் பிற சங்கப்பாடல்களிலும் இவை பற்றிய குறிப்புக்கள் உள்ளனவெனினும் பரிபாடல் இதனை மிக விரிவாக எடுத்துக் காட்டுகிறது.

(தொடரும்)

## சொற்சிலம்பம் - 3

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | ■ |
| | ■ | 3 | | | ■ | 4 | |
| 6 | | | ■ | 7 | | ■ | |
| | ■ | ■ | ■ | 8 | | 9 | |
| ■ | 10 | | | | ■ | | |
| 11 | | | | ■ | ■ | | |
| 12 | | | ■ | 13 | | ■ | |
| | | ■ | 14 | | | | |

**இடமிருந்து வலம்**

*1. தென்புலக் கடவுள் வீற்றிருக்கும் மரம்*
*3. இதையுணர்ந்து தேவாரம் பாட வேண்டும்*
*4. சிவனின் தலையில் இருப்பது*
*6. சிந்திக்கும் இடம்*
*7. அடையாளம்*
*8. முனிவர்கள் இருக்கும் நிலை (குழம்பி)*
*10. தில்லையில் ஆடும் இறைவன்*
*11. முடிவு*
*12. நெருப்பு (புழம்பி)*
*13. மூசிகம்*
*14. திருமந்திரம் தந்தவர்*

**மேலிருந்து கீழ்**

*1. கோபுர உச்சியில் இருப்பது*
*2. கரும்பு வில்லை கையில் கொண்டவன்*
*3. தலைவன்*
*5. தெய்வப் புலவர்*
*9. இரவில் வருவது*
*10. நீளமான தலைமுடி*
*11. முதுகு என்பது*

இக்குறுக்கெழுத்து சட்டகத்தைப் பூர்த்திசெய்து பெயர், முகவரி, தொடர்பு இலக்கத்துடன் அனுப்பி வைக்கும் வாகசர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
25.01.2021
**அனுப்பவேண்டிய முகவரி:**
தென்னாடு, செந்தமிழாகம சிவமடம்,
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் - 2இன் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | 2 மூ | ல | ர் | ■ | 3 த | ரு |
| ங் | ■ | ல | ■ | ■ | 4 சி | வ | ன் |
| 5 க | ண் | வ | ள | ர் | த | ல் | ■ |
| ள் | ■ | ர் | ■ | ■ | ல | ■ | 6 சி |
| ■ | 7 வ | 8 ■ | த | வ | ம் | ■ | வா |
| 9 க | ட | ம் | ப | ன் | ■ | 10 வி | ய |
| ல் | க் | ■ | 11 ர் | ச | ரா | ட | ந |
| வி | கு | ■ | 12 ப | சு | ■ | ம் | ம |

# பணம் கிடைக்கவும், பொருளாதார நிலையில் சீர் பெறுவதற்கும், வறுமை நீங்கி வாழ்வு வளம்பெறவும் பாடவேண்டிய பதிகம் - "இடரினும் தளரினும்"

**திருவாவடுதுறை மாசிலாமணியப்பர் கோயில்**
*இறைவன் : மாசிலாமணி ஈசுவரர்*
*இறைவி : ஒப்பிலாமுலை அம்மை*
*பண் : காந்தாரப் பஞ்சமம்*
*இராகம் : கேதாரகௌளை*

*திருச்சிற்றம்பலம்*

1. இடரினும் தளரினும் எனது உறு நோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

2. வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழ்இளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ் இளமதி வைத்த புண்ணியனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

3. நனவினும் கனவினும் நம்பா, உன்னை
மனவினும் வழிபடல் மறவேன், அம்மான்
புனல்வரி நறுங் கொன்றைப் போது அணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

4. தும்மலொடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால், அரற்றாது என் நா
கைம்மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

5. கையது வீழினும் கழிவு உறினும்
செய்கழல் அடிஅலால் சிந்தை செய்யேன்
கொய் அணி நறுமலர் குலாய சென்னி
மைஅணி மிடறு உடை மறையவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

6. வெந்துயர் தோன்றி ஓர் வெருஉறினும்
எந்தாய், உன் அடிஅலால் ஏத்தாது, என் நா
ஐந்தலை அரவு கொண்டு அரைக்கு அசைத்த
சந்தவெண் பொடிஅணி சங்கரனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

7. வெப்பொடு விரவி ஓர் வினை வரினும்
அப்பா உன் அடி அலால் அரற்றாது, என் நா
ஒப்புடை ஒருவனை உரு அழிய
அப்படி அழல் எழ விழித்தவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

8. பேர் இடர் பெருகி, ஓர் பிணி வரினும்
சீர் உடைக் கழல் அலால், சிந்தை செய்யேன்
ஏர் உடை மணி முடி இராவணனை
ஆர் இடர் பட, வரை அடர்த்தவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.




9. உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாது, என் நா
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பு அரிது ஆயவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

10. பித்தொடு மயங்கி ஓர் பிணி வரினும்
அத்தா உன்அடி அலால் அரற்றாது என் நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள் செய்து பயின்றவனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

**திருக்கடைக் காப்பு**

11. அலைபுனல் ஆவடு துறை அமர்ந்த
இலைநுனை வேல்படை எம் இறைய
நலம்மிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலைஉடை அருந்தமிழ் மாலை வல்லார்.
வினை ஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியன் உலகம்
நிலையாக முன்ஏறுவர் நிலைமிசை நிலைஇலரே.

*திருச்சிற்றம்பலம்.*

**திருவாவடுதுறை செல்லுங்கள்:**

*வறுமையிலிருந்து மீண்டு வாழ்வில் வளம் பெற்றவர்கள் இயலுமாயின் திருவாவடுதுறை கோயிலுக்குச் சென்று மாசிலாமணி அப்பர் மற்றும் ஒப்பிலாமுலை அம்மையை வழிபட்டு வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல ஐம்பூதநாதாரின் திருவருள் கைகூடட்டும்.*

# அடியாருக்கு வாரி வழங்கும் சோழர்கால வாரிவனேசர்





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி இருக்கையில் ஒருநாள் குடத்துடன் செல்லும் பொழுது கால் தடக்கி விழுந்து குடம் உடைந்தது. இது தன் கவலையீனம் என்று நினைத்து வீடு மீண்டான். மறுநாளும் இப்படியே அதே இடத்தில் குடம் தவறிவிழ வியப்படைந்த விருபாக்கன் வந்தவழியைப் பார்க்க மாதொருபாகன் சிவலிங்க வடிவில் கொடிகளின் மத்தியில் காட்சி கொடுத்தார்.

விருபாக்கன் சிவலிங்க வடிவம் வெளிப்பட்ட காட்சியைக் கண்டதும் தன்னறிவு மயங்கிப் பின்னர் சிவபெருமானின் திருவருளுடன் நல்லறிவு விளங்கவும் எழுந்து நின்று கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருக, கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழைத் தந்த கண்ணுதற் பெருங்கடவுளை வணங்கிக் கீழ்க்கண்டவாறு போற்றிப்பாடி வணக்கம் சொன்னான்.

ஐந்தெழுத்தாகினார்க்கு வணக்கம்
அம்பிகை பாகனார்க்கு வணக்கம்
அடியார்கள் நினைத்தவை அளிப்பவர்க்கு வணக்கம்
ஆதி நடு அந்தமில்லாதவர்க்கு வணக்கம்
அருஞ்சிவலிங்க வடிவாகினர்க்கு வணக்கம்
குணமாயினார்க்கு வணக்கம்
குணியாயினார்க்கு வணக்கம் (நற்குணமுடையவன்)
வான் வடிவர்க்கு வணக்கம்
அரவப் பூணுல் அணிந்தவர்க்கு வணக்கம்
கபாலம் தரித்தவர்க்கு வணக்கம்
கைவல்லியம் (முத்தி) தருவார்க்கு வணக்கம்
காக்கும் கையர்க்கு வணக்கம்
தேவலிங்க வடிவாயினார்க்கு வணக்கம் என்று இறைவனை வரவேற்று தரையில் வீழ்ந்து வணங்கினான்.

### வாரிவனேசர் மழை வெள்ளத்தில் மறைதல்

நாள்தோறும் பால்கொண்டு நீராட்டி, போற்றி வணங்கி வந்தான் விருபாக்கன். மீண்டும் விருபாக்கன் பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த விரும்பிய வாரிவனேசர், இவ்வருட (2020 சிலை ஃமார்கழி) மாரியை விட அதிகமாக மழையினை வரவழைத்து ஊழிக்காலமென ஐயுறும்படியாக பெருவெள்ளத்தினை ஏற்படுத்தினார். இப்பெருவெள்ளத்தில் சிவலிங்கமும் முற்றாக மூழ்கி விடவும், நாள்தோறும் நாதனை பால்கொண்டு வணங்கிய விருபாக்கன் கவலையடைந்தான். இருண்டெழுந்த வானம் மின்னி முழங்கி கடும்மழை மென்மேலும் பொழிந்தது. பெருவெள்ளத்தால் சிவலிங்கம் மூழ்கி சிவபூசை தடைப்பட்டதைக் கண்டு மனமுடைந்த விருபாக்கன், இறைவனான வாரியப்பரை கண்டு சிவபூசையினை செய்ய முடியாதவிடத்து தான் இறந்துவிடத் துணிந்தான்.



### சிவனின் அருளால் வைரவ சூலம் வெள்ளத்தினை வற்றச்செய்தது

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமான்,பத்தனின் மனமறிந்து அவனை ஆட்கொள்ள நினைந்து , வைரவப் பெருமானிடம் "சூலப் படையை அனுப்பி நீரினை வற்றும்படி செய்யுமாறும் இல்லையேல் தன் பத்தன் விருபாக்கன் உயிரை மாய்ப்பான்" என்று கூறவும் வைரவப் பெருமான் தீயின் வலிமை கொண்ட சூலப்படையை ஏவி வெள்ளத்தினை வற்றச்செய்தார். வெள்ளம் வற்றி மீண்டும் வெளிப்பட்டார் வாரிவனேசர். விருபாக்கன் உடனே பாற்குடங்களை கொண்டு வாரிவனேசரை நீராட்டி, அவரைப் புகழ்ந்து பாடி அருளைப் பெற்றான். பின்னர் தனக்கு துணை செய்த பளையில் எழுந்தருளியிருக்கும் வைரவப் பெருமானுக்கு வடை படைத்து வணங்கினான்.

பின்னர், "பூதங்களின் தலைவராகிய தேவனே வணக்கம்! சிவனின் மகனாரே வணக்கம்! கால அக்கினி உருத்திர வடிவாகிய தேவரே வணக்கம்!" என்று வணங்கி வைரவப் பெருமானிடம் "தேவரீர்! வாரிவனேசர் திருக்கோவிலிலே வந்து எழுந்தருளி, அடியார்களுக்கு நினைத்ததை வரமாக கொடுத்து இங்கேயே வீற்றிருந்து அருளுக!"என, வேண்டுகிறார். அவரின் விண்ணப்பத்தினை ஏற்று வைரவப் பெருமான் நீவிர் விரும்பியவாறே ஆகட்டும் என்று எழுந்தருளுகிறார். அதன் நிமித்தம் வைரவப் பெருமானும் இக்கருங்கற்கோவிலில் நிலைப்படுத்தப்படுகிறார். விருபாக்கன் வேண்டியது போல் வாரியப்பரும், வைரவரும் ஒரே இடத்தில் எழுந்தருளுவது மிகவும் சிறப்பானதாகும். விருபாக்கன் பின்னர் சிறிது காலம் தவமிருந்து, இல்வாழ்க்கையை முடித்து சி சிவபுரம் சென்றார்.



### வாரிவனேசரை வழிபடுவோர் பலன்கள்

எவரொருவர் மனம் பொறிவழிப் போகாது ஐம்பொறிகளையும் மற்றும் மனம், புத்தி, சித்தம், அகங்காரத்தினையும் அடக்கித் தூயராகி பதின்மும்மைப் பிறைநாள் கழுவாய் வழிபாட்டன்றும் (பிரதோஷ), சிவனிரவு மற்றும் கார்த்திகை மாதம் வரும் திங்கட்கிழமைகள் தோறும் (சோமவாரம்) விரதமிருந்து வாரியப்பரை அர்ச்சித்து வழிபடுகிறாரோ அவரது பாவங்கள், இம்மையிலும் மறுமையிலும் அழிந்து, இன்பமாக வாழ்ந்து சிவப்பரம் பொருளை அடையலாம் என்று நைமிசாரண்யா முனிவர்களுக்கு சூத புராணிகர் திருவாய் மலர்ந்தருளினார்.

### அருள்மிகு ஆதி வாரிவனேசர் திருக்கோவில் மற்றும் சைவப் பண்பாட்டு நடுவம் அமைப்பு

சைவ மாணவர் சபையின் பொருளாளர் சிவத்திரு.தி.கௌரீசன் அவர்கள் பாதையால் செல்லும் பொழுது இந்த இடத்தில் வைக்கப்பட்ட பெயர்ப்பலகையைப் பார்த்துவிட்டு அடியேனுக்கு 2020 ஆனி 6ம் நாள் மறைமதி தினத்தன்று தொலைபேசியில் அழைத்தார். பின்னர் இது குறித்து ஆராய்ந்து, ஆஸ்திரேலியா அறம் அறக்கட்டளை மற்றும் சைவ மாணவர் சபையின் ஊடாக இந்தக் கோவில் மற்றும் சைவப் பண்பாட்டு நடுவம் கட்டுவதற்கு திருவருள் கூடியது. இதற்கான முழுச் செலவையும் வழங்க சாவகச்சேரியைச் சேர்ந்த சிவத்திரு.சங்கரப்பிள்ளை மாணிக்கம் வேதலிங்கம், சிவத்திரு.பொன்னுசாமி யாதவன், சிவத்திரு.சுப்ரமணியம் உமாலோகேஸ் மற்றும் சிவத்திரு.வி.சி. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர் மகிழ்வுடன் முன்வந்தனர்.

சைவ மாணவர் சபையின்(சை.மா.ச) வேண்டுகோளுக்கு இணங்க புராதன வாரிவனேசுவரர் ஆலய மரபுரிமை நிலையத்தின் தலைவர், செயலர் மற்றும் பொருளர் உட்பட நிர்வாகத்தினர் செந்தமிழ் ஆகம வழிபாட்டின் வழி ஏற்ற தாழ்வு முறைமையற்ற வழிபாட்டு முறையில் கோவில் இயங்கும் என்ற உறுதிப்படுத்தலின் அடிப்படியில் கோவில் கட்டும் பணி 2020 ஆனி 18ம் நாள் பதின்மும்மைப் பிறைநாள் கழுவாய் தினத்தன்று அடிக்கல் நாட்டுதலுடன் ஆரம்பமானது. பல வகையான ஆலோசனைகளை மற்றும் அனுமதி ஒழுங்குகளை பேராசிரியர். பரமு புஷ்பரட்ணம் அவர்கள் வழங்கியிருந்தார். அத்துடன் கட்டுமான மற்றும் கள உதவிகளை சிவத்திரு. சங்கரப்பிள்ளை மாணிக்கம் வேதலிங்கம், சிவத்திரு.வ.சசிராஜ் மற்றும் சிவத்திரு. அ.லதாங்கன் (செயலர்கள் சை.மா.ச), சிவத்திரு ஜீவா.சஜீவன் (தலைவர் சை.மா.ச), சிவத்திரு.தி.கௌரீசன் (பொருளாளர் சை.மா.ச) மற்றும் சிவத்திரு.சு.சதீஸ்வரன், சிவத்திரு.ம.கஜன் அவர்கள் மிகவும் சிறப்பாக வழங்கியிருந்தனர்.

அத்துடன் கருங்கல் கோயில் கட்டுமான வேலைகளை கிளிநொச்சி சிவத்திரு.ஆனந்தன் வினோத் அவர்கள் திறம்படச் செய்திருந்தார். சைவ பண்பாட்டு நடுவம் கட்டுமான வேலைகளை சிவத்திரு.அகிலன் அவர்கள் திறம்படச் செய்து முடித்திருந்தார். அருள்மிகு ஆதி வாரிவனேசர் திருக்கோவில் மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்டு செந்தமிழ் ஆகம முறைப்படி தமிழிலே கடவுள் மங்கல நன்னீராட்டு, அருட்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார் குழுத் தலைமையில் சிலை நல்லோரையில் மார்கழித் திங்கள் பதிற்றொருமைப் பிறைநாள் அன்று இறையருளால் இனிதே நிகழ்ந்தது. அவருடன் பாலகுமாரக்குருக்கள் விக்னராஜக்குருக்கள் அவர்களும் துணையிருந்தார்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

**சிவத்திரு.திருவம்பலம் தென்னவன்**
**(குணரத்தினம் பார்த்தீபன்)**
**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில் , யாழ்ப்பாணம்.**

## தென்னாட்டில் தென்புலத்தார் வழிபாடுகள்


**(கடந்த மாத திதி/பிறைநாள் வழிபாடுகள்)**



சிவத்திரு.ஆறுமுகம் சிவசம்பு குணரத்தினம்
சிலைத்திங்கள் தேய்பிறை ஒருமைப் பிறைநாள் (1938 - 2005)



சிவத்திரு.பொன்னுத்துரை பத்மநாதன்
நளித்திங்கள் தேய்பிறை ஒருமைப் பிறைநாள் (1948 - 2009)



சிவத்திரு.சின்னத்துரை முத்துக்குமாரசாமி
நளித்திங்கள் தேய்பிறை பதிற்றிருமை பிறைநாள் (1924 - 1996)



தெய்வத்திருமதி.இரத்தினகாந்தி முத்துக்குமாரசாமி
கொக்குவில் (1930-1993) - நளித்திங்கள் இருமைப் பிறைநாள்

**பிறைநாள் / திதி வழிபாடுகள் செய்ய விரும்புபவர்கள் மடத்தினை தொடர்பு கொள்ளுங்கள். சிறப்பான முறையில் உங்களின் தாய்மொழியாகிய தமிழில் செய்யப்படும். (+94 21 221 2739)**

# தென்னாட்டு நிகழ்வுகள்


கார்த்திகைத் திங்கள் நிறைமதி - தென்னாடு செய்தியிதழ் வெளியீடு


கார்த்திகைத் திங்கள் விளக்கீடு ஐம்பூதநாதர் அலங்காரம்


விளக்கீட்டில் செந்திலாண்டவர்


தென்னாட்டில் சித்தர்களின் தவக்கோலம் - நிறைமதி சித்தர் வழிபாடு


வாரிவனநாதர் - வாரிவனம்


முதலாவது செய்தியிதழ் வெளியீடு


கார்த்திகை திங்கள் நிறைமதி அன்ன அலங்காரம்



வாரிவனேசர் புதிய கோயில்




வாரிவனேசர் சிவனடியார் திருக்கூட்டம்

கூத்தப்பெருமானுக்கு செந்தமிழில் நன்னீராட்டு-கார்த்திகைத் திங்கள் எழுமைப் பிறைநாள்



தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் மூன்றாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு" சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 14ம் நாள் வளர்பிறை அன்று (29-12-2020 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org